நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 3

தொகுதி: 113

திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்

விலை: ரூ.20

மார்ச் - 2019

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி
கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம் I.R.S.,** (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	இதழ்மணம்	4
2.	சிலம்புப்புதையல் - வள்ளுவப் பரப்பாளர் அடிகள்	6
	- முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	
3.	காப்பிய உவமை	10
	- உயர்திரு எஸ்.வையாபுரிப்பிள்ளை	
	சென்ற இதழின் தொடர்ச்சி	
4.	வீரசோழியம்	19
	- பேராசிரியர் ப.மருதநாயகம்	
	சென்ற இதழின் தொடர்ச்சி	
5.	பழந்தமிழ்ப் பனுவல்களில் எழுத்தியல் திரிபு	26
	- பேராசிரியர் இரா.கோதண்டராமன்	
6.	சொல்லியல் கோட்பாடு	36
	- பேராசிரியர் செ.வை.சண்முகம்	
7.	சங்கச் செய்திகள்	40

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 3,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 20	

இதழ் மணம்

இளங்கோவடிகள் தம்மியல்பில் பிறவிக்கவிஞர், அறிஞர் தம்முடைய உரையும் பாட்டும் மிடைந்த நாடக நூலில் திருக்குறள் சிந்தனையை நூல் முழுவதும் மணிமிடைப்பவளம் போலப் பாங்குறத் தம் காவியத்தில் அமைத்திருப்பதை அறிஞர் இளங்குமரனார் எடுத்துரைக்கும் செய்தி ஆழ்ந்த பொருளுடையது.

திருக்குறள் வாழ்வோடு இயைந்தது; உலகியலில் அறமும் பொருளும் போற்றுதற்குரியது. அறத்தையும் பொருளையும் போற்றிப் பாதுகாக்காத மக்கள் பாழ்பட்டு வீணாவர். இன்றைய சமுதாயம் மக்கள் ஒழுக்கத்தைப் போற்றாது வன்முறைக் கூட்டமாக மாறி பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாதநிலை ஏற்பட்டிருப்பதை உலக நாடுகள் வெறுப்போடு பார்க்கிறது. நாடு அறநிலையங்களைப் பாதுகாத்து பொருளியல் கல்வி மேம்படுவதற்கு வழிமுறைகளைக் காணவேண்டும். திருவள்ளுவரும் காந்தியடிகளும் சாராயம் முதலான ஒழுங்கற்ற கீழ்மையை ஒழித்தனர். விடுதலை பெற்றநாடு விடுதலைக்குக் காரணமாக இருந்த குறிக்கோள்களை மறந்து பெரும்பான்மையாகப் போதைப் பொருள் வாணிகத்தைப் பெருக்கியது. இப்போது திருவள்ளுவரும் காந்தியடிகளும் இன்றியமையாதவர்களாக உள்ளனர். திருக்குறள் பரப்பல் இன்றியமையாதது. அதுவே இளங்கோ, சாத்தனார் போன்ற சான்றோர் உள்ளக்கிடக்கை; சான்றோர் காலந்தோறும் உண்மைகளை வலியுறுத்திப் பேசினர். மக்கள் பெரும்பான்மையாக ஒழுக்க நெறியைப் போற்றினர். இன்றைய உரையும் பாட்டுடைய நாடகங்கள், திரைக்காட்சிகள் புகைபிடித்தல், சாராயம்குடித்தல் முதலான வன்முறை அநாகரிகத்தைப் படமாக்கி மக்களைத் திசை திருப்பிப் பேயாட்டமே நாகரிகம் எனப் பரப்பி சமுதாயத்தை சீரழிக்கிறது. சிந்தியுங்கள்! திருக்குறள் வாழ்வு இலக்கியமா? வாய்ப்பேச்சுக்கு மட்டுமா? இன்றையத்தேவை இளங்குமரனாரின் திருக்குறள் பரப்பல் முயற்சி!

பேராசிரியர் இரா.கோதண்டராமன், "பழந்தமிழ்ப் பனுவல்களில் எழுத்தியல் திரிபு" என்னும் கட்டுரையில் மொழியியல் நோக்கில் வகர மெய்யின் வீழ்ச்சியும் அதன் விளைவாக ஏற்படும் மாற்றங்களையும் ஆய்வு செய்திருக்கிறார். சங்க இலக்கியத்தில் அதனுடைய திரிபு குறித்து விரிவான ஆய்வுநிகழ்த்தியுள்ளார். மொழிநூல் அறிஞர் தரும் செய்தி

சங்க இலக்கியத்தைப் புரிந்து கொள்ள மிகவும் பயனுடையதாகும்.

பிப்ரவரித்திங்களில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் மதுரைப் பல்கலைக்கழகமும் செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து நடத்திய தொல்காப்பியப் பயிலரங்கு மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் தமிழறிஞர்கள் பலர் கலந்துகொண்டு தொல்காப்பியம் குறித்த விரிவான ஆய்வுரைகள் நிகழ்த்தினர். மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், நான்காம் தமிழ்ச்சங்க செயலர், பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர், உ.கருப்பத்தேவன் இராமராசபாண்டியன், செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கள் அனைவரும் இணைந்து இப்பெரும் கல்வி முயற்சியை வெற்றி பெறச் செய்தது பெரும்பாராட்டுக்குரியது. நீண்ட இடைவெளிக்குப்பின்பு இதுபோன்ற பயிலரங்கு நடைபெற்றதும் பயிலரங்கில் தமிழகத்தின் பல்வேறு கல்லூரிப் பேராசிரியர்கள் மாணவர்கள் பேராளர்களாகக் கலந்து கொண்டது கல்வி ஒரு வாழ்நாள் முயற்சி என்பதை உறுதிப்படுத்தியது. பயிலரங்கில் பங்கு பெற்ற அனைவரும் பாராட்டுக்குரியவர். பயிலரங்கில் பேராசிரியர் செ.வை.சண்முகம் வழங்கிய "சொல்லியல் கோட்பாடு" என்னும் கட்டுரை இடம்பெறுகிறது.

கடந்த திங்கள் வெளிவந்த பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்களுடைய வீரசோழியம் கட்டுரையும் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை அவர்களுடைய "காப்பிய உவமை" கட்டுரையும் தொடர்ந்து அதன் பிற்பகுதி இடம் பெறுகிறது குறிப்பிடத்தக்கது. அப்பெருமக்கள் ஆராய்ந்து உரைத்துள்ள செய்திகள் மிக்க பயனுடையவை.

பேராசிரியர் ப.மருதநாயகம் மேலை நாட்டுக்கல்வியாளராகிய ஆன்மோனீசு பத்து ஆண்டுகளுக்குமேல் பயின்று கண்ட முடிவுகளைச் சுட்டிக்காட்டிக் கட்டுரையை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

4 சிலம்புப் புதையல்

வள்ளுவப் பரப்பாளர் அடிகள்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

மங்கல வாழ்த்துக் காதைத் தொடக்கம், திங்கள், ஞாயிறு, மாமழை, பூம்புகார் வாழ்த்துகள். இவ்வாழ்த்துகளின் சேர்மப் பொருள் அரச காப்பியத்துக்குத் தக,

"கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி"

என்னும் **திருக்குறள் விளக்கமாதல்**, 'மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு' என்னும் கட்டுரையில் கண்டோம்.

அதே பாடலில் கோவலனை 'மண்தேய்த்த புகழினான்' என்கிறார். அதற்கு அருஞ்சொல்லுரையாசிரியர், 'பூமிசிறுகும்படி வளர்ந்த புகழ்' என்கிறார். அது வள்ளுவப்படி,

'நிலவரை நீள்புகழ்' *(234)*

என்பதாம்.

மனையறம் படுத்த காதையில் கண்ணகியாரை,

'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே"

எனப் பாராட்டுகிறான். இப்பாராட்டை நுணுகி நோக்கிய அடியார்க்கு நல்லார், "இவற்றாற் சொல்லியது **ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையும்** ஆகலின்,

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள" (1101)

என நலம் பாராட்டப் பட்டன" என்கிறார்.

கனாத்திற முரைத்த காதையில் தேவந்தி என்னும் தோழி, கண்ணகியிடம், "சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் துறைகளில் நீராடி, காமனை வழிபட்டால் பிரிந்த கணவர் வரப்பெறுவார்" என்று கூற,

"பீடன்று"

என்று மறுத்து விடுகிறார். ஏனெனில்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" (55)

என்பது தமிழ்மரபு ஆதலால், அதனை உட்கொண்டு, விஞ்சிய நிலையில்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுதகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து"

என்று மதுரைக்காண்ட நிறைவில் அடிகள் கூறுகிறார்.

திருக்குறள் இல்வாழ்க்கை முதல்பாட்டு,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (41)

என்பது. இதில் 'இயல்புடைய மூவர் எவர்' என்பதையும், 'நின்ற துணை' என்பதையும், 'நல்லாற்றின்' என்பதையும் ஆக மூன்று ஒளிவிளக்குகளைத் தந்துள்ளார். அதற்கு முதன்முதல் சான்று விளக்கப்பேராசானாக விளங்குபவர் இளங்கோவடிகள். அது, முன்னே மாதவி விடுத்த முடங்கலில் சுருக்கமாக,

"குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியொடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம்"

என்று குறித்தவர் (13:89-92),

"இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்"

எனக் கோவலன் உரையாக மேல்விளக்கம் புரிகிறார் (16:67-68).

இதனால், இயல்புடைய மூவர் எவர் என்பதற்கு உரைகண்ட பலரும் தடுமாற, அடிகளே முதற்கண் ஒளிவிளக்கம் செய்தவராகிறார். அம்மூவர்: **தாய், தந்தை, மனைவி** என்பவராம்.

இனி இல்வாழ்க்கை, அடுத்த குறளில்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்பதை நினைவு கூருமாறு, அவ்விடத்திலேயே கண்ணகி, தமக்கு நேர்ந்த குறையாக,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்கிறார் (16:71-73)

கோவலன் கொலையுண்டான்; கண்ணகியார் முறை கேட்டுக் காவலன் அரண்மனையை எய்துகிறார். கண்முன் கண்ட வாயிற் காவலனிடமே, தம் எரிவைக் காட்டும் வகையில்,

"அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே"

என்று கூறி, "அறிவிப்பாயே அறிவிப்பாயே"
என்கிறார்.
அவனும் அஞ்சி நடுங்கி ஒடுங்கியவனாய்க் கூற, அரசன் சிறு தடையும் இன்றி,

"வருக; மற்றவள் தருக"

என்கிறான்.

உள்ளே சென்ற கண்ணகி விளிப்பே **'*தேரா*'** ***மன்னா*** என்பது. பின்னர், **'சூழ்கழல்' மன்னா** என்கிறார். நீயும் ஆராய்ந்தாய் அல்லை; ஆராயும் அமைச்சு முதலாயவரையும் சூழ்ந்தும் ஆராயவில்லை என்பதைக் குறித்துக் காட்டுகிறார்.

வேந்தனோ **"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று"** என்கிறான். ஏனெனில், "அதுவே **வெள்வேல் கொற்றம்"** என்று சான்று காட்டுகிறான். இது,

"கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்" (550)

என்னும் வள்ளுவக் குறிப்பாம்.
அப்பொழுதில், மேலும் சீற்றம் கொண்ட கண்ணகியார்,

"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே"

என்று விளித்து,

"என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே"

என்கிறார். **வேந்தன் சினந்தானல்லன்; வன்சொல் சொன்னான் அல்லன்.**

"தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி"

என்று, உடனே சிலம்பை வரச் செய்கிறான்.
வள்ளுவம் கூறும்,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (386)

என்பதற்கு வேந்தன் உயிரோவியமாகத் திகழ்கிறான். அத்திகழ்வே, கண்ணகியாரைப் பின்னே,

"பாண்டியன் தவறிலன் யானவன் மகள்"
என்று கூறும் பெற்றியை வழங்குகின்றது (29:10)
திருக்குறள் இறைமாட்சியில், **மங்கலவாழ்த்துத்** தொடங்கிய அடிகள், நூல் முடிவாம் **வரந்தரு காதையில்** திருக்குறள் அதிகாரங்களை மாமழையாகப் பொழிகிறார்.

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது"

என்பது வள்ளுவ அதிகார அடைவுகள் அல்லவா!

கடவுள் வாழ்த்து	கூடாநட்பு
இடுக்கண் அழியாமை	பிறர்மனை நயவாமை
வாய்மை	கொல்லாமை
புறங்கூறாமை	இல்லறம்
ஈகை	கள்ளுண்ணாமை
தவம்	கள்ளாமை
மெய்யுணர்தல்	நிலையாமை
அவையறிதல்	

- இன்னவை வெளிப்படப் பளிச்சிடுவன அல்லவோ! ஆதலால், வள்ளுவப் பரப்பாளருள் தலைநின்றார் இளங்கோவடிகளார் என்க.

காப்பிய உவமை

(1949 தொகுதி - 46 பகுதி -1 செந்தமிழ் இதழில் வெளிவந்த கட்டுரை)

- உயர்திரு **எஸ்.வையாபுரிப்பிள்ளை**

சென்ற இதழின் தொடர்ச்சி

அடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலின்
உருவி லாளன் ஒருபெருங் கருப்புவில்
இருகரும் புருவ மாகென ஈக்க,
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்
தேவர் கோமான் தெய்வக் காதற்
படைநினக் களிக்க, அதனிடை நினக்கிடையென
அறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியும்
இறுமுறை காணும் இயல்பினி னன்றே
அஞ்சுடர் நெடுவேல் ஒன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்கண் இரண்டா யீத்தது:
மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே,
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே...
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ! (2. மனையறம்.74-79)

என்ற அடிகளில் காதல் உவமையாகக் கனிந்துவிடுகிறது. இவ்வடிகளிற் கண்டவைகளை முறையே புகழுவமை எனவும், தெரிதருதேற்றவுவமை எனவும் அடியார்க்குநல்லார் தமது உரையில் குறித்தனர்.

உவமையையே பெருங்கதை பெரிதும் ஆளுகின்றது; சிலப்பதிகாரம் உவமைகளினும் உருவகத்தையே மிகப்பெரிதும் ஆளுகின்றது. இதனால் உண்டாகும் சுவை இனிமையாலிழைத்தது போன்றதாகும்.

இங்ஙனம் வரும் உருவகத்தில் அழகும் இனிமையும் ஒன்றோடொன்று போட்டியிடுவதைக் காணலாம்.

அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தல்
பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்ப (4, 72-76)

என்ற அடிகள் சான்று. இக்காப்பியத்தில் வரும் உவமப்பொருள்கள் பெருங்கதையிற்காட்டிலும் மிக விரிவாக வர்ணிக்கப்படுகின்றன. உதாரணமாக,

விரிகதிர் பரப்பி யுலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி யுரவோற் காணேன்
அங்கண் வானத் தணிநிலா விரிக்கும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
அரைசுகெடுத் தலம்வரும் அல்லற் காலைக்
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளொ டொருதிறம் பற்றி
வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரில்
தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்த (4, 1-13)

எனவரும் அடிகளைக் காட்டலாம். காதலனை மாலைப்பொழுதில் பிரிந்தவர்கள் படுந்துன்பத்தைக் கூறவந்த ஆசிரியர் மாலைக் காலத்தையும் துன்பநிலையையும் முறையே உருவகத்தாலும் உவமையாலும், வர்ணித்துத் தனிப்பட்ட சித்திரமாக அமைத்துவிடுகின்றார். உவமையை மாட்டிவைத்தற்குரிய ஒரு முளையாணியாகத்தான் காதலனைப்பிரிந்த துன்பச்செய்தி உதவுகிறது. இவ்வாறு அழகாக உவமையை விவரித்துக்கூறுதலே பிரதான நோக்கமாய்க் கதை நிகழச்சியினிடையே அதனை அமைத்தால், அவ்வுவமையை 'இதிகாச உவமை' (Epic Simile) என்று மேனாட்டறிஞர்கள் தனிப்பட விதந்து கூறுவார்கள்.

சிலப்பதிகாரத்திற்குச் சுமார் ஒரு நூற்றாண்டிற்குப்பிற்பட்டுச் சுமார் 9ம் நூற்றாண்டளவில் காவியங்களை விருத்தத்தில் பாடும் வழக்கம் நிலைபெற்றுவிட்டது. சிந்தாமணிக்காவியம் இவ்வாறு விருத்தத்தால் இயன்றது. இவ்வகைச்செய்யுள் நான்குஅடிகள் கொண்டது. சில விருத்தங்கள் மிகச்சிறியவை. இக்காரணங்களால் உவமைகளை விரிவாக அமைத்தல் இயலாததாயிற்று. மிகச்சிறிய வடிவில் உவமைகளைக் கூறவேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

மாரி மொக்குளின் மாய்ந்து விண்தொழச்
சோர்வில் கொள்கையான் தோற்றம் நீங்கினான் (409)

என்ற இடத்தில் 'மாரிமொக்குளின் மாய்ந்து' என வருதலைக் காணலாம். இதுபோன்ற உவமைகள் பல இடங்களில் வருகின்றன. விருத்தங்களில் எதுகை, மோனை முதலிய கட்டுப்பாடுகள் மிக இருந்தமையால், உவமைகள் சில இடங்களில் மோனையில் அமைந்து அடிகளை நிரப்பியும், சில இடங்களில் எதுகையில் அமைந்து பொருளை மயக்குறுத்தியும் வந்தன.

வெம்ப வூர்ந்துலாம் வேனி லானினே (410)
மக்கள் ஈண்டினார் மடங்கல் மொய்ம்பினார் (414)

என்பனவும்,

விற்பழுத் துமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி மைந்தர்
மற்பழுத் தகன்ற மார்பத் திடங்கொண்டு வைகச் செந்நாச்
சொற்பழுத் தவர்க்கும் ஆண்மை சொல்லலாம் தன்மைத்தன்றிக்
கொற்பழுத் தெரியும் வேலார் கொடுஞ்சிலை குழைவித்தாரே (435)

என்பதும் உதாரணங்களாம்.

இவ்விளைவுகள் இக்காவியம் கையாண்ட விருத்தங்களின் இயல்பினால் தோன்றின இங்ஙனமன்றி, இதன் ஆசிரியரது ஆற்றல் வகையினாலும் அவர் மேற்கொண்ட நியதிகளாலும் நேர்ந்த விளைவுகள் வேறுசிலவும் உள. அலங்காரநடையையே இவர் தமது காப்பியத்தில் அமைத்துள்ளார். இதனால் இவரது உவமைகள் இயற்கையில் அமைந்தனவல்ல; செயற்கைத்தன்மை இவற்றில் பெரிதும் காணப்படுகின்றது. உள்ளத்துணர்ச்சியின் மேலீட்டினால் பிறவாதபடி உவமைகள் வலிந்து அமைக்கப்படுகின்றன.

உதாரணம்:

பெண்ணெனும் உழலை பாயும் பெருவனப் புடைய நம்பி. (713)

வேழவெண் கோட்டு மெல்கோல் தின்றுகூன் குருதி வாளால்
ஆழநா வழித்து நெய்த்தோர் கொப்புளித் தழிந்த மாலின்
சூழ்குடர்க் கண்ணி சூடி நிணத்துகி லுடுத்து வெள்ளென்பு
ஊழ்பெற அணிந்து சூற்பேய் ஆடக்கண் டுவந்து நக்கான் (803)

என்பனவாம்.

மேலும், இவரது உவமைகளில் இவரது முந்துநூற்கல்வி புலப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. முன்னோர் மொழிகளைப் பொன்னேபோற் போற்றுதலில் இவர் பெரிதும் ஈடுபட்டவர்.

வெருகு வேட்பச் சிரிப்பனபோல
முகைத்த முல்லை வெய்ய (1651)

என்பது புறநானூற்றில் 117-ஆம் செய்யுட் கருத்தைப் பின்பற்றியது.

வீட்டிடந் தோறும் வில்லக விரல்போற் பொருந்தி நின்று (2118) என்பது 370-ஆம் குறுந்தொகைச் செய்யுளைக் கருதியது. இங்ஙனம் பல. அன்றியும் மரபுவழிப்பட்ட உவமைகளை இவர் அடிக்கடி எடுத்தாளுகின்றார்.

ஆழியான் ஊர்திப் புள்ளின் அஞ்சிறை யொலியின் நாகம்
மாழ்கிப்பை யவிந்த வண்ணம் (449)

திங்கள் சூழ்ந்தபன் மீனெனச் சென்றெய்தி
நங்கை தவ்வையும் தோழியும் நண்ணினார் (1337)

என்பன உதாரணங்கள். இன்னும் இவர் பலதிறப்பட்ட உவமைகளையும் அடிக்கடி கையாளுகின்றனர். 433, 434 என்ற இரண்டு செய்யுட்களில் 5 உவமைகள் தரப்பட்டுள்ளன. நாற்றைப் பரக்க நட்டால்தான் பயிர் நன்றாக வளரும்; நெருங்கநட்டால் பயிர் செழித்து வளர்வதில்லை. இதுபோலவே, உவமைகளை நெருக்கியமைத்தால் சுவை விளையமாட்டாது. ஒரு சில இடங்களில் உவமைகள் மிகை நடிப்பாகக் காட்சி தருகின்றன. பசுநிரைகளைக் கவர்ந்து சென்றமையால் ஆய்க்குலப்பெண்கள் வருத்தமுற்றனர் என்ற செய்தி,

வலைப்படு மானென மஞ்ஞை யெனத்தம்
முலைப்படு முத்தொடு மொய்குழல் வேய்ந்த
தலைப்படு தண்மலர் மாலை பிணங்க
அலைத்த வயிற்றின ராயழு திட்டார் (424)

என வருணிக்கப்படுகிறது. உவமையைப் பலபட விரித்துக்கூறுதலும் இக்காப்பியம் கைக்கொண்ட ஒரு முறையே; ஆனால் அழகிய ஒரு மங்கையைக் கூறுகூறாக அங்கச்சேதம் செய்து பரப்பிவைத்தது போன்ற உணர்ச்சியையே இவ்விரிவுகள் நம்மனத்தில் உண்டாக்குகின்றன. மிக்க நயம்பட இவைகள் அமைந்த இடங்களும் அங்கங்கே காணலாம்.

தாய்தன் கையின் மெல்லத் தண்ணென் குறங்கின் எறிய
ஆய்பொன் அமளித் துஞ்சும் அணியார் குழவி போலத்
தோயுந் திரைகள் அலைப்பத் தோடார் கமலப் பள்ளி
மேய வகையிற் றுஞ்சும் வெள்ளை யன்னம் காண்மின் (930)

என்பதனைப் பாவனையிற் கண்டு இன்புறலாம்.

இறுதியாக இப்பெருங்கவிஞனது உவமைகள் பல இடங்களில் இழிந்த உணர்ச்சிகளை எழுப்புவனவாய்ச் சுவைகெட அமைந்துள்ளன.

கார்விரி மின்னனார் மேற் காமுகர் நெஞ்சின் ஓடுந்
தேர்பரி கடாவித் தேந்தார்ச் சீவகன் அருளிற் போகி (442)

தன்பால் மனையாள் அயலான்றலைக் கண்டு பின்னும்
இன்பா லடிசிற் கிவர்கின் றகைப் பேடி போலாம் (443)

சில்லரிச் சிலம்பின் வள்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குற் றேரணிந்து கொம்மை முலையெனும் புரவி பூட்டி
நல்லெழில் நெடுங்கண் அம்பாப் புருவவில் உருவக் கோலிச்
செல்வப்போர்க் காமன் சேனை செம்மல்மேல் எழுந்ததன்றே (458)

என்பன மேற்கூறியதை உண்மையெனத் தெளிவிக்கின்றன. இவற்றை யெல்லாம் நோக்கினால் உவமையும் உருவகமும் பற்றிய அளவில் சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் சிந்தாமணி ஒரு உயர்ந்த படியை எய்தாது தாழ்ந்தபடியில் விழுந்துவிட்டது என்றுதான் நாம் கொள்ளுதல் வேண்டும். ஆனால் வேறுபல நலன்கள் இச்சிந்தாமணிக்காவியத்தில் உள்ளன. அவற்றை இங்கே கூறின் அது மற்றொன்று விரித்தலாகும். ஒன்று நாம்

நினைவில் வைத்தல் வேண்டும். விருத்தம் உவமையைக் காட்டிலும் உருவகத்திற்கு மிகவும் ஏற்ற செய்யுளினமாகும். அதனைப் பிரசாரத்திற்குக் கொண்டுவந்தது சிந்தாமணியே. இக்காவியத்தில் இழிவுபட்ட சுவை காணப்படுமாயின் அதற்குக் காரணம் அக்காலத்தவர் அச்சுவையை இழிவெனக்கருதாது விரும்பியேற்றனர் என்று துணிதலே பொருந்தும்.

சிந்தாமணி தோன்றிய இரண்டு நூற்றாண்டுகளுக்குப்பின் கம்பன் பிறந்து, தான் காவியநலன்களின் சிகரத்தை எய்தியது போலவே, உவமைநலன்களின் சிகரத்தையும் எய்திவிட்டான். இவனது உவமைநலன்களை இனி நோக்குவோம்.

தொல்காப்பியர் காலத்திற்குப்பின் உவமை முதலிய அலங்காரத்தைக் குறித்து வடமொழியிலும் தமிழிலும் பலபல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் இவைகளால் தொல்காப்பியர் கூறியுள்ளனவற்றைக்காட்டிலும் சிறப்புடையதாக ஒன்றும் விளங்கிவிடவில்லையென்றே சொல்லுதல் வேண்டும். இப்பின்னூல்களை இயற்றிய ஆசிரியர்கள் பலவாறாகப் பெயர்களையமைத்தலொன்றையே செய்துள்ளார்கள். ஆகவே தொல்காப்பியர் கருத்துக்களைத் தான் நாம் ஆதாரமாகக் கொள்ள வேண்டும். அவர்,

சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப
கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்.

என இரண்டுசூத்திரங்களை அமைத்துள்ளார் என்பது முன்பே குறிக்கப்பட்டது. இவற்றால் உவமேயத்தின் சிறப்புகளை விளக்குதலே உவமையின் அடிப்பட்ட கருத்தாகும். ஆனால் கவிஞர்கள் இவ்வாறு விளங்குதலோடுமட்டும் நின்றுவிடவில்லை. இவர்களுடைய வழக்காற்றில் பற்பல புதுக்கருத்துக்களையும் உவமை பற்றிமேற்கொண்டனர். இவ்வழக்காறுகள் இவர்கள் இயற்றியுள்ள கவிதைகளிலிருந்துதான் தெரிந்து கொள்ளக்கூடியன.

முதலாவது உவமானம் உவமேயத்திற்குத் தகுதியுடையதாக இருத்தல் வேண்டும். ஒருபொருளுக்குப் பல உவமானங்கள் கையாளப்படுமாயின் அவற்றுள் ஒவ்வொன்றும் அப்பொருளுக்குப் பொருந்தியிருத்தலோடு அவைகள்தம்மினும் ஒரு தகுதிச்சேர்க்கை இருத்தல் வேண்டும். அன்றியும் காவியத்தில் மற்ற இடங்களில்

அமைந்துகிடக்கும் அப்பொருளின் இயல்புடன் உவமானம் நன்கு பொருத்தமுறுதலும் வேண்டும். இராமன் அனைவருக்கும் உயிர் போன்றவன். இவ்வாறு கம்பன் பல இடங்களிலும் வருணித்துள்ளான். தசரதன் தன்னுடைய உயிர் என்று இவனைக் கருதுகிறான். இவன் நீங்கினால் ஆவி நீங்கியதோடு ஒக்கும் என்றும் நினைக்கிறான். கதையின் நிகழ்ச்சியிலும் இராமன் இவனைவிட்டுப் பிரிந்த துக்கம் ஆற்றமாட்டாது இவனது உயிரும் நீங்குகின்றது. இந்தக்கருத்தோடு இயையவே இராமனைக் குறித்துத் தசரதன் கூறும் இடங்களிலெல்லாம் உவமானங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். அயோத்தியிலுள்ள மக்களும் பிறரும் இராமனைக் குறித்துக்கூறும் இடங்களிலும் இத்தகைய உவமம் கையாளப்படுகிறது.

ஒவி னல்லுயிர் உயிர்ப்பினோ டுடல்பதைத் துலைய
மேவு நல்லழ கெழில்கெட விம்மல்நோய் விம்மத்
தாவில் ஐம்பொறி மறுகுறத் தயரதன் என்ன
ஆவி நீக்கின்ற தொத்ததவ் வயோத்திமா நகரம் (நகர்நீங்கு.216)

இரண்டாவதாக உவமங்கள், பொறியின்பம் சிறந்து விளங்கும் படியாகவும் அமையலாம். உதாரணமாக,

சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன் (கைகேயி சூழ்.50)

கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம் அருளினாள் அழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கும் மாத ரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றோ
(கோலங்காண்.19)

என்ற செய்யுட்களைக் கூறலாம்.

மூன்றாவதாக, உவமைகள் உள்ளத்தின் உணர்ச்சியில் ஊறி வெளிவருதல் வேண்டும். அப்பொழுதுதான் உவமானம் உவமேயக்காட்சியை அழகுறுத்தி, அதற்கு அனுகூலமான அடிநிலமாக (Background) அமைந்து நிற்கும். இவ்வாறு உணர்ச்சியில் ஊறி வந்த உவமானங்கள் கம்பனது பெருங்காவியத்தில் பல இடங்களிற் காணலாம். ஒரு செய்யுள் மிகப்பிரசித்தமானது.

இப்பொழு தெம்மனோரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத் திராமன் திருமுகச் செவ்வி நோக்கில்

ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக்கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா
(கைகேயி சூழ்.108)

நான்காவதாக, கவித்துவ உண்மையை நன்கு முற்றும் தெரித்தற்கே உவமைகள் கையாளப்படுதல் வேண்டும். பொதுப்பட வசனத்தில் பொருள்களைப் பகுத்துப்பகுத்து உணர்கிறோம். இதனால், அவற்றின் உருவம் முழுமையும் நமக்குப் புலப்படுவதில்லை. உவமையினால் அவற்றை நாம் நன்கு தெரிந்துகொள்ளுதல் கூடும். இவ்வாறு தெரித்தற்கு அனுகூலமாகவே உவமைகள் அமைதல் வேண்டும். ஓர் உவமையினால் முழுதும் அறியக்கூடாதிருக்குமானால், பல உவமைகளையும் அடுத்தடுத்து ஆண்டு, பொருளின் உண்மை யியல்பை உயர்ந்த கவிஞர்கள் நமக்குத் தெரிவிப்பார்கள். இவ்வுவமைகள் அழகின்மீது அழகாய் அமைந்து பெரியதோர் இன்பம்பயக்கும். இவ்வகை ஆட்சியும் அழகும் கம்பனது காவியத்திற் பல இடங்களில் உள்ளன.

கோணுதற் கமைந்த கோலப் புருவம்போல் திரையுங் கூடப்
பூணுதற் கினிய முத்தின் பொலிமணல் பரந்த வைப்பின்
காணுதற் கினிய நீளவெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் சீதை கண்ணின் மணியென வயங்கு வானை;

படர்மழை சுமந்த காலைப் பகர்வரும் அமரர் கோமான்
அடர்சிலை துறந்த தென்ன ஆரந்தீர் மார்பி னானைக்
கடல்கடை மத்திற் பாம்பு கழற்றிய தென்னக் காசின்
சுடரொளி வலயந் தீர்ந்த சுந்தரத் தோளி னானை;

வீரனை நோக்கி யங்கம் மென் மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்கண் அஞ்சன மலையன் றாகில்
கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கும் நீதி அறநிறம் கரிதோ என்றான்.
(விபீடணன்.134-137)

என்பன உதாரணங்கள்.

இங்ஙனமாகப் பல நியதிகளையும் கம்பன் தனது கவித்துவ திருஷ்டியால் கண்டு தனது மகாகாவியத்தில் கையாண்டுள்ளான்.

இப்பெருங்கவிஞனது உவமைகளை மட்டும் தனிப்பட நாம் ஆராய்ந்தால், எத்தனையோ அரிய உண்மைகள் நமக்குப் புலப்படும். உவமை கவிதையின் அந்தராத்மா என்று சொல்லமுடியாது. ஆனால், அவ்அந்தராத்மா இயங்கி உலவும் வளமிக்க சோலையாக அது கருதத்தக்கது. இச்சிறப்பு கம்பன் ஆளும் உவமைகளில் நன்கு விளங்குகிறது.

கம்பனது காவியத்திற்குப் பிற்பாடு காவியங்கள் ஒடுங்கு நிலையை அடைந்துவிட்டன. இதுபோன்றே இவன்காலத்திற்குப் பிற்பாடு உவமைகளும் ஒடுங்குநிலையை எய்தின. பாதாதிகேச வர்ணனைகளில் கவிஞர்கள் தங்கள் அறிவாற்றலைச் செலுத்தத் தொடங்கினர். முந்துநூல்களில் தாம் கற்றவற்றை நினைவிற் கொண்டு தம் செய்யுளில் அமைத்தலே கவித்துவம் என்றுங்கொண்டனர். புதியன படைக்கும் ஆற்றலும் ஆழ்ந்த உள்ளுணர்ச்சியும் மனோபாவனையும் உண்மைக்கவித்துவமும் மறைந்துவிடலாயின. இயற்கையை நேர்பட அறிந்து அனுபவித்து அதனைக் கவிதைக்குப் பயன்படுமாறு உவமையாக மாற்றுந் திறமும் இல்லையாய் முடிந்தது. கவிதை வறட்சியுற்று இலக்கியமே ஒரு பாலை நிலமாகிவிட்டது. இதினின்று வெளியேறிக் கவிதையின்பம் சுரக்குநெறியில் முயன்ற கவிஞர்களுள் தேசீயகவி பாரதியே தலை சிறந்தவர்.

"பூமணக்கும் பொழில்முகவைப் புரிமணக்கும்
தவப்பேறாய்ப் போந்து கற்றோர்
தாம் மணக்கும் பெருமையுடையச் சபைமணக்கும்
பிரசங்கம் சாற்றல் மேவி
பாமணக்கும் சுவைத்தமிழ்ப் படிமணக்கும்
படிபரிபா லனஞ்செய் தான்றோர்
நாமணக்கும் புகழ்மிகுந்த நலமுறுமால்பாஸ்
கரசாமி நரேந்தர கேண்மோ"

வீரசோழியம்

பேராசிரியர் **ப.மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல்
தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை 600113.
கைபேசி : 9442787727

சென்ற இதழின் தொடர்ச்சி

நூற்பாக்கள் கூறும் இலக்கணங்களுக்குச் சான்றுப் பாடல்களையெல்லாம் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தே தரும் உரையாசிரியர் அவற்றை 'உதாரணக் கவிதைகள்' என்றோ 'உதாரணங்கள்' என்றோ சொல்லாது 'வரலாறு' என்றே அறிமுகப்படுத்துவார். அலங்காரப் படலத்தின் முப்பத்தொன்பதாவது நூற்பா சித்திரக்கவிதைகளின் வகைகளைத் தொகுத்துக் கூறும்.

ஏறிய மாலை மாற்றே சக்கரம் இனத்தால் எழுத்தால்
கூறிய பாட்டு வினாவுத்தரமேக பாதமன்றித்
தேறியகாதை காப்புச்சுழிகுளம் சித்திரப்பா
வீறியல் கோமூத்திரியும் பிறவும் விரித்துரையே (39)

நாற்பதாவது நூற்பா விரவியல், மணிப்பிரவாளம் ஆகியவை பற்றியும் நாற்பத்தொன்பதாவது நூற்பா துறைக்கவி, கிளவிக்கவி, செய்யுளின் பயன் ஆகியவை பற்றியும் குறிப்பிடும். ஆனால் வீரசோழிய உரையாசிரியர் முப்பத்தொன்பதாவது நூற்பாவில் 'பிறவும் விரித்துரையே' என்ற தொடரைப் பயன்படுத்திக் கொண்டு, ஆனந்தம், நரம்பு, பண், திறன், பாலை, கூட்டம், திணை, இருது, காலம், எண்மணம் ஆகியவைபற்றியெல்லாம் பேசுவார். இப்பட்டியலை அமிர்தசாகரனாரிடமிருந்து எடுத்துக்கொள்வார். இவற்றுள் அலங்காரப் படலத்திற்குத் தேவையற்றவையெல்லாம் இடம்பெற்றிருக்கக் காணலாம். ஆனால் இவையெல்லாம் தமிழ் இலக்கண நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையே.

III

வீரசோழியத்தின் தாதுப்படலத்தின் முதல் நூற்பா,

மன்னிய சீர்வட நூலில் சர பச வென்று வந்து
துன்னிய தாதுக்களின் போலிபோலத் தொகுதமிழ்க்கும்

பன்னிய தாதுக்களைப் படைத்துக்கொண்டு முன்னிலையில்
உன்னிய ஏவல் ஒருமைச் சொல்போன்று உலகிற்கு ஒக்கவே

என்று வடமொழித்தாது பற்றியும் தமிழில் எவ்வாறு தாதுவைப் படைத்துக் கொள்வது என்பது பற்றியும் கூறும். இந்நூற்பாவை விளக்கும் உரையாசிரியர் "தமிழ்ச்சொல்லிற்கெல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்" என்றெழுதுவார். இது மூல நூற்பாவில் இல்லாத கருத்து. உரையாசிரியர் "தமிழ்ச்சொல்லிற்கெல்லாம் **வடநூலே** தாய்" என்று கூறும்போது சொல்லிலக்கணத்தையே சொல்லென்று கூறுகிறார் என்பதைச் சி.வை.தாமோதரம்பிள்ளை "ஈண்டுச் சொல்லென்றார் சொல்லிலக் கணத்தை" என்று அடிக்குறிப்பில் எடுத்துரைப்பார். தமிழ்ச் சொல்லிலக்கணத்திற்கு வடமொழிச் சொல்லிலக்கணமே மூலம் என்பது அவர் சொல்ல வந்த கருத்தாகலாம். அவர் தாதுப்படலத்தை மட்டும் கருத்தில் கொண்டு, தொல்காப்பியத்தில் வேர்ச்சொல்லாய்வு இல்லாததால் இவ்வாறு கூறியிருக்கலாம். ஆனால் இதனைத் தவறாகப் புரிந்து கொண்ட மேலைக்கல்வியாளரான ஆன் மோனியசு தமது *வீரசோழியம் பற்றிய கட்டுரைக்கே* "Sanskrit is the mother of all Tamil words" என்னும் தலைப்பைத் தந்துள்ளார். பாணினீயத்தில் இருக்கும் வேர்ச் சொல்லாய்வு எவ்வளவு கற்பனையானதென்பதும் பயனற்றதென்றும் இப்பொழுது மொழியியல் வல்லுநர்களால் சுட்டிக் காட்டப்பெற்று வருகிறது. இது தெரியாத காலத்தில் பாணினீயம் பெரிதும் கொண்டாடப்பட்ட இலக்கண நூலாகத் திகழ்ந்ததை நாம் புரிந்து கொள்ளலாம். பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கில அகர முதலியைத்தொகுத்த பெருங்கல்வியாளராகிய ஜான்சன் (Johnson) தமது முன்னுரையில் சொற்களின் பொருள்கள் காலத்திற்குக்காலம் மாறிக்கொண்டே போகுமாதலால் ஒரு மொழியின் வேர்ச்சொல்லாய்வால் எவ்விதப் பயனுமில்லை என்பார். பேச்சு வழக்கொழிந்த வடமொழிக்கு இலக்கணம் செய்த பாணினி வேர்ச்சொல்லாய்வு என்ற பெயரில் அறுபது விழுக்காட்டிற்கு மேலான சொற்களுக்கு முற்றும் கற்பனையான, முழுப்பொய்யான வேர்களைக் கூறியுள்ளார் என்றும் அவ்வாறான வேர்கள் வடமொழி இலக்கியங்களில் எங்கும் காணப்படவில்லை யென்றும் வடமொழி விற்பன்னர்களே கூறியுள்ளது நாம் அறிய வேண்டிய செய்தியாகும்.

IV

ஆன் மோனியசு (Anne E.Monius), தமது "வீரசோழியம்" என்னும் கட்டுரையில் கூறும் ஆய்வு முடிகள் கருதற்குரியவை.

வீரசோழியமும் அதன் விளக்கவுரையும், ஒரு புத்த சமய இலக்கியப் பண்பாட்டைக் கட்டமைக்கக் கவிதை மொழி ஆய்வை மேற்கொள்கின்றன.

தமிழ் இலக்கணம், கவிதையியல் ஆகியவை பற்றி **வீரசோழியம்** 181 நூற்பாக்களைக் கொண்டது. அதன் "பாயிரம்" மூன்று நூற்பாக்களாலானது. இது பதினாறு அல்லது பதினேழு நூற்பாக்களைக் கொண்ட கட்டளைக் கலித்துறை யாப்பைக் கையாளுகிறது. காரைக்காலம்மையார் முதல் அருணகிரி நாதர் வரை வாழ்ந்த கவிஞர்கள் பக்திப்பாடல்களில் கையாண்ட யாப்பு இது.

வீரசோழியம் தொல்காப்பியம் காட்டும் தமிழ் இலக்கிய மரபிற்குக் கடன்பட்டது என்பது தெளிவு. அது தொல்காப்பியத்தையும் அதற்குப்பின் வந்த இலக்கண நூல்களைப் போன்றும் கவிதையியல் ஆய்வு, ஒலியியல், தொடரியல் ஆய்வுகளோடு இணைத்தே செய்யப்பட வேண்டிய ஒன்று என்று உறுதியாக முடிவு செய்கிறது. இலக்கண (வியாகரணம்)மும் இலக்கியத்திறனாய்வும் வெவ்வேறு துறையினவை என்ற வடமொழி மரபிற்கு இது முற்றும் மாறானது. எழுத்து, சொல், பொருள் என்னும் பெரும்பிரிவுகளிலும் வீரசோழியம் தொல்காப்பியத்தையே பின்பற்றுகிறது. தொல்காப்பியத்தின் 1500க்கும் மேற்பட்ட நூற்பாக்களை 181 நூற்பாக்களாகச் சுருக்கியிருப்பினும் வீரசோழியம் அடிப்படையில் தொல்காப்பியத்தையே முன்மாதிரியாகக் கொள்கிறது. வடநூல் மரபைப் பின்பற்றி வடமொழிக் கலைச்சொற்களையும் கோட்பாடுகளையும் கையாளுவதில் அது தொல்காப்பியத்திலிருந்து வேறுபடுகின்றது. தொல்காப்பியத்தின் ஒலியன்களைப் பற்றிய ஆய்வு மிகவும் விரிவானது. இதனை வீரசோழியம் பெரிதும் சுருக்கித் தருகிறது. 'மெய்பிரிதாதல்', 'மிகுதல்', 'குன்றல்' என்று தொல்காப்பியத்தில் காணப்பெறும் கலைச்சொற்களுக்குப் பதிலாக, வீரசோழியம் 'ஆதேசம்', 'ஆகமம்', 'லோபம்' என்னும் வடசொற்களைப் பயன்படுத்துகிறது.

எழுத்துக்கள் அல்லது ஒலியன்களின் இணைப்பில் **வீரசோழியம்** தொல்காப்பியத்தினும் கூடுதலான புதிய சான்றுகளைத் தருகிறது.

சகரமெய் அ, ஐ, ஔ ஆகிய உயிரெழுத்துக்களோடு இணைந்து மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பிய விதி. ஆனால் **வீரசோழியம்** ச், க், ட், ந், ப், ம் ஆகிய மெய்களெல்லாம் உயிரெழுத்துக்கள் எல்லாவற்றோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வருவதற்கு விதியைத் தளர்த்துகிறது. தொல்காப்பியம், ஞகரமெய் ஆ, எ, ஒ ஆகிய உயிரெழுத்துக்களோடு மட்டுமே சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் என்று வரையறை செய்கிறது. ஆனால் **வீரசோழியம்** 'ஞாத்துவம்' போன்ற பல வடசொற்கள் தமிழில் புகுந்து விட்டதைச் சுட்டிக் காட்டுகிறது.

சொல் பற்றிய ஆய்விலும் சில கூறுகளில் **வீரசோழியம்** தொல்காப்பியத்தினின்றும் வேறுபடுகிறது. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியர் சொல்லிற்குத் தரும் இலக்கணம். ஆனால் **வீரசோழியம்** சொல்லிற்குப் பாணினி தரும் விளக்கத்தை எடுத்துக் கொள்கிறது. சொல்லென்பது பெயர்ச்சொற்களில் 'சுப' என்றும் வினைச்சொற்களில் 'திங்' என்றும் முடியும் என்பது பாணினியின் செயப்பாட்டு வினை பற்றிய விளக்கத்திலும் **வீரசோழியம்** வடநூல் மரபைப் பின்பற்றுகிறது.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் கவிதையின் எல்லாக் கூறுகளையும் அகத்திணை, களவு, கற்பு, புறத்திணை, மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு போன்ற உட்பிரிவுகளில் விளக்குகிறது. ஆனால், **வீரசோழியம்** இவற்றைப் பொருள், யாப்பு, அலங்காரம் என்று மூன்று தனித்தனிப் பிரிவுகளாகக் காட்டுகிறது. அலங்காரம் என்னும் அணியைப் பொறுத்தமட்டில் **வீரசோழியம்** 'தண்டி சொன்ன கரைமலி நூலின் படியே உரைப்பன்' என்று தண்டியின் 'காவ்யதர்சா' எனும் நூலைத்தழுவி இனிய கவிதையின் மூச்சாகிய நடையின் பத்துக் கூறுகளைப் பட்டியலிடுகிறது. பொருளை உள்ளவாறே வருணிக்கும் தன்மை, உவமை, ஊக்கம், பாவிகம் ஆகிய கூறுகளைப் பற்றிய விளக்கங்களில் **வீரசோழியம்** வடநூலைப் பின்பற்றுகிறது. அலங்காரங்களை வரையறை செய்யும்போது **வீரசோழியம்** தண்டியினைப்போல் கவிதைச்சான்றுகளைத் தரவில்லை.

மணிப்பிரவாளநடை பற்றித் தமிழில் முதலில் பேசும் நூல் **வீரசோழியமே**. வடமொழி எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களோடு இணைவதை 'விரவியல்' என்றும் வடசொற்கள் தமிழ்ச்சொற்களோடு கலப்பதை மணிப்பிரவாளம் என்றும் கூறுவர். விரவியலும்

மணிப்பிரவாளமும் கவிதைக்கு உரியனவாக **வீரசோழியம்** கருதுகிறது. ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரையிலும் தமிழ் வைணவ உரையாசிரியர்களும் சைன உரையாசிரியர்களும் மணிப்பிரவாளத்தை உரைநடையிலேயே கையாண்டனர். 'வீரசோழியம்' என்று வீரராசேந்திரன் என்னும் சோழன் பெயரைப் பெற்றுள்ளதோடல்லாமல் அந்நூல் அச்சோழ மன்னன் பேசிய மொழியையே ஆராய்வதாகச் சொல்கிறது:

"எல்லா உலகும் மேவிய வெண்குடைச் செம்பியன்
வீரராசேந்திரன் தன் நாவு இயல் செந்தமிழ்"

இலக்கணத்திலும், கவிதை இயலிலும் வடநூல் மரபைத் தழுவியிருப்பினும் **வீரசோழியம்** தமிழையே தலைசிறந்த மொழியாகக் கருதுகிறது.

"The **Viracoliyam,** although maintaining an allegiance to the Sanskrit grammatical and poetic tradition, ultimately assumes, in its very nature as a Tamil poetic grammar, that Tamil language (tamilmoli) is the Superior or best of languages) p.126

வடமொழி இலக்கண விதிகளுக்கும், முருகியல் கோட்பாடுகளுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய மொழி தமிழென்பதையும் அது கல்வெட்டுமொழியாக வடமொழியை ஒத்த அல்லது அதற்கு மேலான முருகியல் இன்பம் தரவல்லதென்பதையும் நிறுவுவதே **வீரசோழியத்தின்** தலைநோக்கமாகும்.

("The viracoliyam's principal project, in other words, the exposition of Tamil as a literary language in full accord with sanskrit rules of grammar and aesthetic principles, closely parallels the emergence of Tamil as an inscriptional language equal to, if not surpassing, the power and aesthetic appeal of Sanskrit")

தண்டி கூறும் வடமொழி வைதர்ப்ப நடையின் பத்துப் பண்புகளைச் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்துத் தரும் **வீரசோழியம்** அவற்றிற்கு மாறானவை கௌடீய நடைக்கு உரியவை என்று எடுத்துரைக்கும். வைதர்ப்பம் தண்டி போற்றும் ஒரே நடையாகும். எனவே தமிழ்க்கவிதை மொழியை வடமொழிக் கவிஞர்களின் வைதர்ப்பநடையோடு ஒட்டிப்பேசும் போது வேங்கடம்முதல் குமரிவரையிலான தென்னிந்தியாவே நல்ல தமிழ்பேசும் இடம் என்பதோடு நல்ல வடமொழிக்கவிதை இயற்றப்படும் இடமும் அதுவே என்பதை **வீரசோழியம்** சுட்டுகிறது.

("Thus aligning itself and the Tamil poetic language it analyzes with the style

of the vaidarbha sanskrit poets - the only style that counts for Dandin - the viracōḻiyam imagines southern India "from venkatam to kumari" not only as the land where pure or good Tamil is spoken but as the region where good sanskrit poetry is composed." p.130)

இலக்கியத்தமிழுக்கு வடமொழிக்கிருக்கும் இடத்திற்கு இணையான இடத்தைக்கோரும் **வீரசோழியம்** வடமொழிக்கு மாற்றாகவும் செயல்படவல்லது தமிழென்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

("The Viracōḻiyam thus imagines Tamil, as a regional literary language, to be equal in status to, even an alternative to, sanskrit as a literary language choice with transregional application and import. The viracōḻiyam, in essence, claims for literary Tamil an authority equeal to that of sanskrit and ties the best of Sanskrit poetic style to the southern region of India where, perhaps not coincidentally, Tamil is also spoken" P.130)

தமிழும் வடமொழியும் வீரசோழியத்தில் ஒன்றுக்கொன்று இணையானவையாக இடம்பெறுகின்றன. இதனால், வட்டாரமொழியென்ற நிலையிலிருந்து தமிழ் உயர்த்தப்படுகின்றது.

"Tamil and Sanskrit meet in the Viracōḻiyam as equals, and the status of Tamil as merely regional or local language is raised in the process" p.131)

கன்னடத்துக் **கவிராஜமார்க்கம்,** மலையாளத்து **லீலாமார்க்கம்** போல் அல்லாமல், **வீரசோழியம்** தொல்காப்பியத்தை முன்மாதிரியாகக் கொண்டு வடமொழி இலக்கண, கவிதை வகைமைகளைத் தொல்காப்பிய நெறியோடு பொருத்திக் காட்டுகிறது.

வீரசோழியமும் அதன் உரையும் குறித்து ஆன் மோனியசு எழுதியுள்ள நீண்ட கட்டுரையின் இறுதியில் அவையிரண்டும் தமிழ்ச்சார்பும் புத்தசமயச் சார்பும் உடையவை என்பதைத் தாம் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு உணர்வதாக அவர் கூறுகிறார். வடநூல் வழியாகத் தமிழ் இலக்கணத்தைப் பார்க்கும் அவையிரண்டிற்கும் தொல்காப்பியமே மூலம் என்பதையும் அன்னார் ஏற்றுக்கொள்கிறார்.

In returning to the Viracōḻiyam and Peruntēvanār's Commentary after a decade of further thought and much new scholarship on South Indian history and literature both texts now appear more "Tamil" and more "Buddhist", thoroughly embedded in complex ways in the scholarly conversations flowing through the chōḻa courts of medieval Tamilnāṭu, yet equally situated in much broader currents of explicitly Buddhist discourses of grammar and poetics. Both texts "Tamil" and "Buddhist" inclinations perhaps go a long way toward explaining their relative uniqueness in south Indian Literary history, their originality in analyzing Tamil

through Sanskrit lenses, as well as their somewhat stuing lack of any alevious Successors to the project for at least five centunnies. As "Tamil" texts, the Viracōliyam and its commentary chart a unique course in theorizing Tamil directly through 'Vaṭanul' although framed by the Tolkappiyam (p.128)

தமிழை அழகிய பெண்ணாக உருவகித்து அவளுக்கே **வீரசோழியம்** தன் நூற்பாக்களை அர்ப்பணிக்கின்றது. "வாள்நுதலே", "தாழ் குழலே", "ஆயிழையே", "பனிமொழியே", "பைந்தொடியே", "விளங்கிழையே" என்றெல்லாம் அப்பெண் அழைக்கப்படுகின்றாள். பிற நூற்பாக்களிலும் தமிழ்மொழி பாராட்டப்படுகிறது; "தூமொழியே" "வாய்மொழியே" என்பவற்றையெல்லாம் உரையாசிரியர் மகடூஉ முன்னிலை என்றழைப்பார். வடமொழியோடு முற்றிலும் ஒப்பிடற்குரிய இலக்கியச் சிறப்பு வாய்ந்த தமிழ் அதற்கென்ற வாழ்வும் ஆற்றலும் கொண்டதாகக் காட்டப்பெறுகிறது; அவலோகிதனின் வாயிலிருந்தே தோற்றம் பெற்ற பெருமை அதற்கு உண்டு என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார். ஒரேவொரு வடநூல் மட்டுமே வீரசோழியத்தில் மேற்கோளாகக் காட்டப்பெறுகிறது. அலங்காரம் பற்றிய பகுதியில் தண்டியின் பெயர் மூன்று முறை சொல்லப்படுகிறது. வேறு வடமொழிநூல் எதுவும் இடம்பெறவில்லை.

தொல்காப்பியத்திற்கும் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கத்திற்கும் இடைப்பட்ட நீண்ட காலவெளியில் தோன்றிய தமிழ் இலக்கண நூல்களில் **வீரசோழியம்** மட்டுமே தொல்காப்பியத்தைப் பின்பற்றி எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றையும் இணைத்துப் பேசுகிறது. குணவீர பண்டிதர் எழுதிய **நேமிநாதமும்**, பவணந்தியின் **நன்னூலும்** எழுத்தையும் சொல்லையும் ஆராய்கின்றன; அவற்றில் பொருள் புறக்கணிக்கப்படுகிறது. **இறையனார் அகப்பொருள்** அக இலக்கிய மரபை மட்டுமே எடுத்துக்கொள்கிறது. **தமிழ்நெறி விளக்கம், களவியற் காரிகை, அகப்பொருள் விளக்கம்** ஆகியவையெல்லாம் அகப்பொருள் பற்றியவை; **புறப்பொருள் வெண்பாமாலை** புறப்பொருளைப் பற்றியது. யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் தமிழ் யாப்பைப் பற்றியவை. தண்டியலங்காரத்தின் பாடுபொருள் அணிமட்டுமே. பாட்டியல் பற்றிய புதிய ஆய்வு பன்னிரண்டாம் நூற்றாண்டில் தொடங்குகின்றது.

தொடர்ச்சி அடுத்த இதழில்

பழந்தமிழ்ப் பனுவல்களில் எழுத்தியல் திரிபு

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்**
தொல்காப்பியர் அடிப்படை
ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு,
அசோக்நகர், புதுச்சேரி - 605008
கைபேசி : 9443151044

1.0 உயிர் நீட்சி

1.1. மொழியில் உயிர் நீட்சி என்பது ஓர் மெய்யொலியின் வீழ்ச்சியால் நிகழ்கிறது. இந்த வீழ்ச்சியில் பெரும்பாலும் இனங் காணப்படுவது வகர மெய்யாகும். இந்த மெய்யானது உயிரொலி இயைபினைத் தொடர்ந்தும் உயிரொலி இயைபு இல்லாமலும் நிகழ்கின்றது. உயிரொலி இயைபு (Vowel Harmony) என்பது முதலில் நிகழும் ஓர் உயிர்க் குறிலை அடுத்த அசையில் நிகழும் உயிர்க் குறிலாக மாற்றி அமைக்கிறது. முதல் அசையில் நிகழும் உயிர்க் குறிலும் அடுத்த அசையில் நிகழும் உயிர்க் குறிலும் ஓரினமாக இருந்தால் உயிரொலி இயைபுக்கு வாய்ப்பில்லை. உயிரொலி இயைபு ஓர் மெய்யின் இழப்பினைத் தொடர்ந்து நிகழவேண்டும் என்ற நியதி இல்லை. எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியத்தில் **கலிழும்** (ஐங்.220.5, குறு.11.2, பதி.24.26) என்பதும் **கலுழும்** (அகம்.63.19, கலி.45.14, குறி.248, 251) என்பதும் காணப்படுகிறது. இவற்றுள் கலிழும் என்பது முந்தைய வடிவம். உயிரொலி இயைபின் காரணமாக கலுழும் என்பதில் உள்ள உகரம் கலிழும் என்பதில் ஈற்றசையில் நிகழும் உகரத்தின் தாக்கத்தால் நிகழ்ந்த ஒன்றாகும். இங்கே மெய்யொலி இழப்பின் காரணமாக உயிரொலி இயைபு நிகழவில்லை. அதனால் உயிர்க்குறில் உயிர் நெடிலாகத் திரிவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் எல்லா நிலைகளிலும் இவ்வாறு நிகழும் என்று சொல்லமுடியாது. முன்பே குறிப்பிட்டதுபோல் இரண்டு மாறுபட்ட உயிர்க்குறில்களுக்கு இடையில் வகரம் நிகழ்ந்தால் அந்த வகரத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து முதலில் நிகழும் உயிர்க்குறில் அடுத்த அசையில் நிகழும் உயிர்க்குறிலாகத் திரிகிறது. இதனை மொழியில் நிகழும் இயல்பான மாற்றமாகக் கருத வாய்ப்பிருந்தாலும் இந்த மாற்றம் ஒரு குறிப்பிட்ட கிளை மொழியில் நிகழ்ந்து பின்னர் செவ்வியல் தமிழில் இடம் பெற்றதாகக் கருதலாம்.

1.2. பழந்தமிழில் **-த்த்-**, **-ந்த்-**, **-த்-** நீங்கலாக **இகர** விகுதியும், **இன்** விகுதியும் சார்ந்த இருவகை இறந்தகால வினைத்திரிபு மரபுகள் காணப்படுகின்றன. இகர விகுதியின் நிகழ்ச்சியைப் **பாடி, பாடிய, பாடியான், பாடியோன்** ஆகிய வாய்பாட்டு வினைகளிலும் **இன்** விகுதியின் நிகழ்ச்சியைப் **பாடின, பாடினன், பாடினான், பாடினோன்** ஆகிய வாய்பாட்டு வினைகளிலும் காணலாம். இவற்றுள் **பாடி, பாடியோன், பாடின, பாடினான்** ஆகிய வாய்பாட்டு வினைகளின் நிகழ்ச்சி இக்காலத் தமிழிலும் பதிவாகியுள்ளது. பழந்தமிழில் இகர விகுதி சார்ந்த வினையமைப்புகள் சில எழுத்தியல் திரிபுகளுக்கு இலக்காகி நிகழும் போக்கு காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகத் **தழுவி, தழுவிய, தழுவியவன், தழுவியான், தழுவியோன்** ஆகிய வாய்பாட்டு வினையமைப்புகள் முறையே **தழீஇ, தழீஇய, தழீஇயவன், தழீஇயான், தழீஇயோன்** என்ற வாய்பாட்டினவாகத் திரிந்து பழந்தமிழில் நிகழ்கின்றன. இந்தத் திரிபுகள் **தழுவு** என்ற வினைப்பகுதியில் நிகழும் வகர மெய்யின் கேட்டினைத் தொடர்ந்து நிகழ்ந்தவையாகும். வகர மெய்க் கேட்டுக்கு முன்பாக உயிரொலி இயைபு விதியும் (Vowel Harmony Rule) மேற்படி மெய்யின் கேட்டினைத் தொடர்ந்து அதன்முன் நிகழும் உயிர்க்குறில் இனநெடிலாகத் திரியும் விதியும் செயல்பட்டு **தழீஇ, தழீஇய, தழீஇயவன்** முதலான வாய்பாட்டு வினைவடிவங்களின் தோற்றத்திற்கு வகைசெய்கின்றன. இந்தத் திரிபுகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

1	(1) *தழுவி > தழிவி	(உயிரொலி இயைபு)
	(2) தழிவி > தழிφஇ	(வகரக்கேடு)
	(3) தழிφ இ > தழீஇ	(இகரம் நெடிலாதல்)
2	(1) *தழுவிய > தழிவிய	(உயிரொலி இயைபு)
	(2) தழிவிய > தழிφ இய	(வகரக்கேடு)
	(3) தழிφஇய > தழீஇய	(இகரம் நெடிலாதல்)
3	(1) *தழுவியவன் > தழிவியவன்	(உயிரொலி இயைபு)
	(2) தழிவியவன் > தழிφ இயவன்	(வகரக்கேடு)
	(3) தழிφ இயவன் > தழீஇயவன்	(இகரம் நெடிலாதல்)

இறந்தகால விகுதியாகிய இகரக்கிளவி உயிரொலியன்களின் முன்

எழுத்தியலால் கட்டுண்ட இய் என்ற ஓர் சார்ந்துருபைக் கொண்டுள்ளது. இந்த விகுதியின் நிகழ்ச்சியை **தழீஇய**, **தழீஇயவன்** ஆகிய வினைவடிவங்களில் காணலாம்.

1.3. உயிரொலி இயைபின் நிகழ்ச்சி எல்லா வினை வடிவங்களின் மீதும் நிகழ்வதில்லை. எடுத்துக்காட்டாக **அறீஇ**, **செறீஇ**, **விரீஇ** ஆகியவற்றின் அடிநிலை வடிவங்கள் ***அறிவி**, ***செறிவி** ***விரிவி** ஆகியனவாகும். **அறீஇ**, **செறீஇ**, **விரீஇ** ஆகியவை ***அறிவு**, ***செறிவு**, ***விரிவு** ஆகிய தொல்தமிழ் வினைப்பகுதிகளின் மீது தோன்றியவையாகும். பழந்தமிழுக்கு முந்தைய நிலைக்குரிய இந்தத் தொல்தமிழ் வினைப்பகுதிகள் **அறி**, **செறி**, **விரி** ஆகிய முதன்மை வினைகளை நிலைக்களனாகக் கொண்டவையாகும். இந்த முதன்மை வினைகள் இகரவீற்றினவாகலின் ***அறிவி**, ***செறிவி**, ***விரிவி** ஆகிய வினையெச்சவடிவங்கள் **அறீஇ**, **செறீஇ**, **விரீஇ** எனத் திரிகையில் உயிரொலி இயைபுக்கு இலக்காக வாய்ப்பில்லை. **அறீஇ** என்ற பழந்தமிழ் வினையெச்சவடிவம் எடுத்துக்காட்டாக ***அறிவி** என்ற அடிநிலை வினையெச்ச வடிவத்தினின்றும் பின்வருமாறு வருவிக்கப்படும்.

4 (1) *அறிவி > அறிφஇ (வகரக்கேடு)

(2) அறிφஇ >அறீஇ (இகரம் இனநெடிலாதல்)

வகரக் கேட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விட்டிசையைத் தவிர்ப்பதற்கு அதன் முன் நிகழும் குறிலானது இன நெடிலாகத் திரிகிறது.

1.4. இந்த ஆய்வில் சில அடிப்படைச் செய்திகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். **அறிவி**, **செறிவி**, **விரிவி** ஆகியவை ஈரேவல் வினைப் பகுதிகளாகவும் தமிழில் நிகழ்கின்றன. இது ஒரு தனிவளர்ச்சி. இந்த வினைப் பகுதிகளுக்கும் பழந்தமிழில் வழங்கும் **அறீஇ**, **செறீஇ**, **விரீஇ** ஆகிய வினையெச்ச வடிவங்களின் அடிநிலை வடிவங்களாகிய ***அறிவி**, ***செறிவி**, ***விரிவி** ஆகியவற்றுக்கும் எந்த வகையான தொடர்பும் இல்லை. **அறிவு**, **செறிவு**, **விரிவு** ஆகியவை பெயர்நிலைக் கிளவிகளாகவும் தமிழில் நிகழ்கின்றன. இந்தப் பெயர்நிலைக் கிளவிகளுக்கும் ***அறிவி**, ***செறிவி**, ***விரிவி** ஆகிய மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட வினையெச்சங்களில் வினைப்பகுதிகளாக நிகழும் **அறிவு**, **செறிவு**, **விரிவு** ஆகியவற்றுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. ஆயினும் இவை பிந்திய வளர்ச்சியாகக் கருதப்படும்; அல்லது முன்பே குறிப்பிட்டதுபோல் இவையெல்லாம் கிளைமொழியில் நிகழ்ந்து செவ்வியல் தமிழில் இடம் பெற்றவையாகக்

கருதலாம். இந்தத் தெளிவு இல்லையெனில் தமிழ் வினைகளின் வரலாறு சார்ந்த ஆய்வில் தொய்வு ஏற்பட்டுத் தவறான முடிபுகளுக்கு வழிவகுத்துவிடும்.

2.0. தழுவியும் தழீஇயும்

2.1. **தழீஇ, தழீஇய, தழீஇயவன்** முதலான வாய்பாட்டில் அமைந்த பழந்தமிழ் வினைவடிவங்கள் ஓரளவுக்குக் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அடிநிலை வடிவங்களும் அவற்றின் வினைப்பகுதிகளும் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

5 (1) அறீஇய (கலி.84.27) *(<*அறிவி, *அறிவு-)

(2) உறீ இயாள் (கலி.139.19) (<*உறுவியாள், *உறுவு-)

(3) உறீஇயான் (கலி.142.17, 145.41 (<உறுவியான்)

(4) உறீஇயாங்கு (கலி.139.36) (<*உறுவியாங்கு)

(5) (1) உரீஇ (அகம்.331.4, கலி.40.3, பத்துப் 7.80, 10.24, (புறம்.235.10) (<*உருவி, *உருவு-)

(2) உரீஇ (புறம்.380.2) ‘அணிந்து’ (<*உருவி)

(6) (1) உரீஇய (அகம்.371.1, குறு.297.1, புறம்.7.2) (<*உருவிய)

(2) உரீஇய (அகம்.175.1) ‘உரசிய’ (<?*உரிவிய, *உரிவு-)

(3) உரீஇய (புறம்.7.2) ‘உரிஞ்சிய’ (<*உரிவிய, *உரிவு-)

(7) எழீஇ (கலி.139.19, நற்.121.9, 139.5, பதி.29.8, பரி.14.24, 20.15 ‘<*எழுவி, *எழுவு-)

(8) எழீஇய (கலி.70.22) (<*எழுவிய)

(9) எழீஇயவை (கலி 36.5) (<*எழுவியவை)

(10) எழூஉதல் (தொல்.எழுத்து.இளம்.6) (<*எழுவுதல், *எழுவு-)

(11) ஒரீஇ (அகம்.32.13, கலி.8.1, நற்.250.9, பத்துப்.6.498) (<*ஒருவி, *ஒருவு-)

(12) ஒரீஇய (நற்.126.1, 387.3, பதி.15.31, புறம்.127.9) (<*ஒருவிய)

(13) கடிஇயாற்கு (நற்.313.5) (<கடீஇயான் + க்கு) (<*கடிவியான், *கடிவு-)

(14) கழீஇ (அகம்.321.15, ஐங்.399.1, நற்.12.5),

(<*கழிவி, ‘கழித்து, *கழிவு-’)

(15) கழீஇ (பத்துப்.8. 16, நற்.42.8, 366.4) (<*கழுவி, *கழுவு-)

(16) கழீஇய (அகம்.113.19, கலி.122.22, பத்துப்.8.98, 4.380, 0.48, குறு.13.1, நற்.18.8, 279.10, 311.2, (<*கழுவிய/*கழிவிய, *கழுவு-/*கழிவு-)

(17) குழீஇயவை (கலி.104.16) (<*குழுவியவை. *குழுவு-<*குழுமு)

(18) கெழீஇ (அகம்.151.2 நற்.90.11) (<*கெழுவி<*கெழுமி, *கெழுவு-)

(19) கெழீஇய குறு.2.3, நற்.97.4, பதி.16.17, புற.232.5, பத்துப்.பொரு.182, 6.123) (<*கெழுவிய<*கெழுமிய)

(20) கொழீஇய (நற்.15.1, 49.1, 106.2, 159.2, 203.1) (<*கொழுவிய, *கொழுவு-)

(21) கொளீஇ, (பல எண்ணிக்கையின) (<*கொளுவி, *கொளுவு-)

(22) கொளீஇயள் (குறு.263.5) (<*கொளுவியள்)

(23) செரீஇ (பத்துப்.8.119, குறு.295.1, பத்துப்.1,27, நற்.196.8, பரி.7.45, 11.98, 12.88, புறம்.22.21, 281.1) (<*செருகி, *செருகு-)

(24) செரீஇய (கலி.79.5, குறு.92.4, புறம்.315.4) (<*செருகிய)

(25) செலீஇ (நற்.54.1) (<*செலுவி, *செலுவு-)

(26) செறீஇயோன் (நற்.136.9) (<*செறிவியோன், *செறிவு-)

(27) தழீஇயவன் (கலி.103.35) (<*தழுவியவன், *தழுவு-)

(28) தழீஇயற்று (நற்.350.9) (<*தழுவியற்று)

(29) நிறீஇ (பல எண்ணிக்கையின) (*நிறுவி, *நிறுவு-)

(30) நிறீஇய (அகம்.352.14, பதி.80.16) (<*நிறுவிய)

(31) மரீஇ, மரீஇய (பல எண்ணிக்கையின) (<*மருவி, *மருவிய, *மருவு-)

(32) மரீஇயோர் (அகம்.231.15, குறு.102.4 புறம்.13.8) (<*மருவியோர்)

(33) மரீஇயோன் (புறம்.234.6) (<*மருவியோன்)

(34) வழீஇ (கலி 106.27, 139.34) (<-?வழுவி, *வழுவு)

(35) வழீஇய (நற்.332.4, பத்துப் 10.280) (<?வழுவிய, *வழுவு-)

(36) விரீஇ (அகம்.130.7) (<*விரிவி, *விரிவு-)

(37) வெலீஇயோன் (புறம்.125.11) (<?*வெலுவியோன், *வெலுவு-)

(38) ஒரீஇயவள் (பெ.க.1.40.356) (<ஒருவியவள், *ஒருவு-)

ஐகாரவீற்று வினைப்பகுதிகளைப் பொருத்தவரை இகரவிகுதியும் அதன் சார்ந்துருபாகிய **இய்** என்பதும் நேரடியாக வினைப்பகுதிகளையடுத்து நிகழ்கின்றன. எ-டு. **கவைஇ, கவைஇய, தைஇய, நசைஇ, நசைஇய, நசைஇயாள்** (கலி.100.13), **நசைஇயோர்** (கலி.59.26), **நினைஇ** (நற்.297-3, பத்துப்.8.246), **நினைஇய** (நற்.44.4), **நினைஇயன** (கலி.15.23), **மதைஇய** (அகம்.86.30, கலி.131.21, குறு.286.5) இவை தொல்வினைத்திரிபின் எச்சங்களாகத் தமிழில் நிகழ்கின்றன.

2.2. **தழுவிய, தழுவியவன்** ஆகிய வினைவடிவங்கள் **தழீஇய தழீஇயவன்** எனத்திரிந்தது போன்றே **தழுவின, தழுவினவன்** ஆகியவையும் தழீஇன, **தழீஇனவன்** எனத்திரிந்து நிகழவேண்டும். இந்த வகையில் மூலபாடத்தில் நிகழும் **ஒரீஇனன்** (குறு.203.5) (‹*ஒருவினன்) என்ற வினைவடிவம் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கதாகும். ஐகார ஈற்று வினைப் பகுதியையடுத்தும் இன் விகுதி நேரடியாக நிகழும் நிலையும் ஒரோவழி காணப்படுகிறது எ-டு. **மதைஇனள்** (கலி.109.5) **தைஇனர்** (1967.கழகப்பதிப்பு), **தையின** (அகம்.259.2), **தையினாள்** (பரி.11.95,96), **துடையினள்** (நற்.120.8) **மறையினள்** (நற்.113.8, அகம்.299.18,386.8) **கவையினன்** (அகம்.26.23, 32.9, ஐங்.404.2, நற்.128.9) இதனைக் கருத்தில் கொண்டு இந்த வடிவங்கள் ***தைஇன, *தைஇனாள், *துடைஇனள், *மறைஇனள், *கவைஇனன்** என மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும். இந்த அடிப்படையில் மூல பாடத்தில் நிகழும் பிறழ்வடிவங்கள் திருத்தப்பட வேண்டும்.

3.0. பிறழ் வினைகளும் நேரிய வினைகளும்

3.1. இன் இறந்த கால விகுதியாக நிகழும் பல வினைவடிவங்கள் பழந்தமிழில் பிறழ் வடிவங்களாகப் பதிவாகியுள்ளன. இந்த வடிவங்கள் மூலபாடத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும். இன் விகுதியேற்ற இறந்தகாலப் பிறழ் வடிவங்களும் அவற்றின் நேரிய வடிவங்களும் கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

பிறழ் வடிவங்கள்	**நேரிய வடிவங்கள்**
6 (1) ஒரீஇயின (பதி.21.34)	*ஒரீஇன (<*ஒருவின)

(2) அறிவுறீஇயின (நற்.161.9)	*உறீஇன (<*உறுவின)
(3) அறீஇயினென் (கலி.140.30)	*அறீஇனென் (<*அறிவினென்)
(4) உறீஇயினாள் (நற்.8.5)	*உறீஇனாள் (<*உறுவினாள்)
(5) உறீஇயினான் (கலி.42.24)	*உறீஇனான் (<*உறுவினான்)
(6) கவைஇயினள் (ஐங்.409.2)	*கவைஇனள்
(7) கழீஇயின்று (பரி.20.5)	*கழீஇன்று (<*கழுவியின்று)
(8) கெழீஇயினர் (அகம்.93.2)	*கெழீஇனர் (<*கெழுவு- <*கெழுமு-)
(9) தழீஇயினர் (கலி.94.24)	*தழீஇனர் (<*தழுவினர்)
(10) தழீஇயினன் (குறு.359.5)	* தழீஇனன் (<*தழுவினன்)
(11) தழீஇயினேன் (அகம்.49.7)	* தழீஇனேன் (<*தழுவினேன்)
(12) தழீஇயினும் (நற்.330.7)	* தழீஇனும் (<*தழுவினும்)
(13) தைஇயினர் (கலி.102.6)	* தைஇனர்
(14) தைஇயினார் (பரி.20.27, 28, 29)	* தைஇனார்
(15) பரீஇயினள் (அகம்.306.13)	*பரீஇனள் (<?* பருவினள்)
(16) கொளீஇயினிர் (பெ.க.1.56.104)	*கொளீஇனிர் (<*கொளுவினிர்
(17) கவைஇயின (பெ.க.1.41.46)	* கவைஇன
(18) தழீஇயினர் (பெ.க.4.8.85)	* தழீஇனர் (<*தழுவினர்)
(19) ஒரீஇயினன் (பெ.க.1.36.182)	*ஒரீஇனன் (<*ஒருவினன்)
(20) இரீஇயினள் (சீ.சி.2445)	* இரீஇனள் (<*ஒருவினள்)
(21) கெழீஇயினாள் (சீ.சி.1386)	* கெழீஇனாள் (<*கெழுவினாள்)

மேலே (6)-இல் குறிக்கப்பெற்றுள்ள பிறழ் வடிவங்களின் நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன? பிறழ் வடிவங்களில் இன் விகுதியின் முன் யகர உடம்படுமெய் ஓர் இடைச் செருகலாக நுழைக்கப்பட்டுள்ளது. இந்த எடுத்துக்காட்டுகளில் இகரக் குறிலையடுத்து நிகழும் யகரமெய் (5)-இல் குறிக்கப்பெற்றுள்ள எடுத்துக்காட்டுகளில் நிகழும் யகரத்தின் தாக்கமாகக் கொள்ளப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு. நேரிய வடிவங்களின் அடிநிலை வடிவங்களில் இந்த யகர மெய்யின் நிகழ்ச்சிக்கு வாய்ப்பில்லை. தொல்காப்பிய நூற்பாக்களிலும் இத்தகைய பிறழ்வடிவங்களின் நிகழ்ச்சி

காணப்படுகின்றது. கருதுக: **வழீஇயினும்** (சொல்.சேனா.15), **தழீஇயின** (சொல்.சேனா.17). இந்த வடிவங்கள் **வழீஇனும், தழீஇன** என மீட்டுருவாக்கம் செய்யத்தக்கனவாகும். அல்லது திருத்தம் செய்யப்பட வேண்டும். இவற்றின் அடிநிலை வடிவங்கள் ***வழுவினும், *தழுவின** என்பனவாகும். இந்த அடிநிலை வடிவங்களைக் கருத்தில் கொள்ளவில்லையென்றால் ***வழீஇனும், *தழீஇன** என மீட்டுருவாக்கம் செய்யத்தக்கனவாகும்; அல்லது திருத்தம் செய்யப்பட வேண்டும். இவற்றின் அடிநிலை வடிவங்கள் ***வழுவினும், *தழுவின** என்பனவாகும். இந்த அடிநிலை வடிவங்களைக் கருத்தில் கொள்ளவில்லையென்றால் ***வழீஇனும், *தழீஇன** ஆகியவற்றில் நிகழும் ஈகார நெடிலின் தோற்றத்தை விளக்க முடியாமற் போய்விடும். இதேபோல் **வழீஇயினும், தழீஇயின** ஆகியவற்றை ஏற்புடையனவாகக் கொண்டாலும் அவற்றில் நிகழும் ஈகார நெடிலின் தோற்றத்தை விளக்கமுடியாமற் போய் விடும். ***வழீஇனும், *தழீஇன** ஆகியவற்றை நேரிய வடிவங்களைக் கருத்தில் கொண்டால் அவற்றில் நிகழும் ஈகார நெடிலின் தோற்றத்தைப் பின்வருமாறு விளக்க முடியும்.

7	(1) *வழுவினும் > வழிவினும்	(உயிரொலி இயைபு)
	(2) வழிவினும் > வழிஃ இனும்	(வகரக்கேடு)
	(3) வழிஃஇனும்>வழீஃஇனும் (=வழீஇனும்)	(இகரம் இன நெடிலாதல்)
8	(1) *தழுவின > தழிவின	(உயிரொலி இயைபு)
	(2) தழிவின > தழிஃஇன	(வகரக்கேடு)
	(3) தழிஃஇன > தழீஃஇன (=தழீஇன)	(இகரம் இன நெடிலாதல்)

வழீஇனும், தழீஇன ஆகிய வடிவங்கள் உடம்படு மெய்பெற்று **வழீயினும், தழீயின** எனத்திரிந்தமைவதற்கும் வாய்ப்புள்ளது. **துடையினள்** (<துடைஇனள்) என்ற வடிவம் இவ்வாறு தோன்றியதுதான்.

3.2. தொல்காப்பிய நூற்பாவில் காணப்படும் **தழீஇயின** என்பதை நேரிய வடிவமாகக் கொண்டால் வண்ணனை ஆய்வில் அதன் அமைப்பை **தழீஇ+இன்+அ** எனக்கொள்ள நேரிடும். இந்த அமைப்பாய்வில் **தழீஇ** என்பதைத் **தழுவு** என்பதன் சார்ந்துருபாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு கொண்டால் வரலாற்று நிலையில்கூட அதில் நிகழும் இகர ஈகாரங்களின் தோற்றத்தை விளக்க முடியாது.

மாறாக, **தழீஇன** என்பதை நேரிய வடிவமாகக் கொண்டால் வண்ணனை ஆய்வில் அதில் நிகழும் **தழீ** என்பதைத் **தழுவு** என்பதன் சார்ந்துருபாகக் கொள்வதுடன் அதில் நிகழும் ஈகாரத்தின் தோற்றத்தையும் வரலாற்று நிலையில் விளக்கமுடியும். இந்த ஆய்வு மேலே (6)-இல் குறிக்கப்பெற்றுள்ள பிறழ்வடிவங்களுக்கும் நேரிய வடிவங்களுக்கும் பொருந்தும். இதனைக் கருத்தில் கொண்டு (6)-இல் காணப்படும் பிறழ் வடிவங்கள் தவிர்க்கப்பட்டு அவற்றின் நேரிய வடிவங்கள் தொல்காப்பியம், சங்கப்பாடல்கள் ஆகியவற்றின் செம்பதிப்பில் இடம்பெறவேண்டும்.

3.3. இந்த எழுத்துரையில் வினைவடிங்களில் நிகழ்ந்த எழுத்தியல் திரிபுகளும் அதன் விளைவாகத் தோன்றி அமைந்த நெடில் உயிர்களும்பற்றி விரிவாகப் பேசப்பட்டன. இந்த மாற்றங்கள் பழந்தமிழில் பெயர்ச்சொற்களிலும் நிகழ்ந்துள்ளது. இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் கருத்தில் கொள்ளத்தக்கன.

9. பரீஇ வித்திய வேனற்

குரீஇ வோப்புவாள் பெருமழைக் கண்ணே (குறு.72.4, 5)

இந்த எடுத்துக்காட்டில் நிகழும் **பரீஇ, குரீஇ** ஆகியவை முறையே **பரவி, குருவி** ஆகிய பெயர்ச்சொற்களின் திரிபாகும். இந்தத் திரிபைப்பற்றி உ.வே.. சாமிநாதைய்யர் பின்வருமாறு குறிப்பிடுவார். "பருத்திக்குரிய பெயராகிய **பருவி** என்பது **பரீஇ**யென்றும், **குருவி** என்பது **குரீஇ** யென்றும் வந்தன. இங்ஙனமே **மருவி-மரீஇ, உருவி-உரீஇ** என வினைச் சொற்களும் வருதல் காண்க." இதேபோல் செம்மறியாட்டைக் குறிக்கும் *துருவு என்பது துரூஉ என்றும், *குருவு என்பது குரூஉ என்றும் *பழுவு என்பது பழூஉ என்றும் செவ்வியல் தமிழில் நிகழ்வதைக் காணலாம்.

4.0. எழுத்தியல் திரிபும் அளபெடையும்

இந்த ஆய்வில் இரண்டு செய்திகளை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். செய்யுளிசைக்கு வேண்டி நெடிலையடுத்து அளபெடுத்து மிகும் இனக்குறிலானது யாப்பமைதிக்கு இன்றியமையாத ஓர் உறுப்பாகும். சீரமைப்பு தொடர்பான ஆய்வில் அளபெடுத்த இனக்குறில் அசையுறுப்பாக அலகிடப்படும். ஆனால் எழுத்தியல் திரிபின் வாயிலாக நெடிலையடுத்து நிகழும் இனக்குறில் அசையுறுப்பாக அலகிடப்படும். ஆனால் எழுத்தியல் திரிபின் வாயிலாக நெடிலையடுத்து நிகழும் இனக்குறில் அசையுறுப்பாக நிகழுமிடங்களும் உண்டு; நிகழாத இடங்களும் உண்டு. **செப்பே வழீஇனும் வரைநிலை யின்றே**

(தொல்.சொல்.சேனா.15) எனத் திருத்தப்பட்ட பாடத்தில் **வழீஇனும்** என்ற வடிவம் **வழீ+இனும்** என்றே அலகிடப்படும். **அளபெடை அசைநிலை யாகலும் உரித்தே** (தொல்.பொருள்.பேரா.329) என்ற தொல்காப்பியரின் கூற்று செய்யுளிசை அளபெடை வடிவங்களுக்குப் பொருந்தாது. வரலாற்று நிலையில் எழுத்தியல் திரிபைத் தொடர்ந்து நெடிலையடுத்து நிகழும் இனக் குறிலுக்கு மட்டுமே யாப்பமைதிக்கேற்பப் பொருந்தும். ஆனால் இதனை ஒரு பொதுவிதியாகக் கொள்ளமுடியாது. எழுத்தியல் திரிபைத் தொடர்ந்து நெடிலையடுத்து நிகழும் இனக்குறில் அசையாக அலகிடப்படுவதும், அலகிடப்படாமல் அசைநிலையாகக் கொள்ளப்படுவதும் யாப்பியல் அமைதியைப் பொறுத்ததாகும். எடுத்துக்காட்டாக, **விராஅய தளையு மொரூஉநிலை யின்றே** (தொல்.பொருள்.பேரா.373) என்ற அடியில் காணப்படும் **விராஅய, ஒரூஉ** என்பவற்றில் நிகழும் அகர உகரக்குறில்கள் அசையாக அலகிடப்படாமல் வெற்றுறுப்பாகவே கொள்ளப்படும். **ஒரூஉ** என்பது ***ஒருவு** என்பதன் திரிபாகும். மேற்படி எடுத்துக்காட்டில் நிகழும் விராஅய என்பது பிறழ்வடிவமாகும். இது **விராய** என்று இருக்க வேண்டும். **விராஅய** என்பதில் நிகழும் அகரக்குறிலுக்கு யாப்பியல் நோக்கில்கூட வாய்ப்பில்லை. ஆனால் **தழீஇ ('தழுவி)** என்பது **தழீ+இ** என்று அலகிடப்பட்டு இகரக் குறில் நேரசையாகக் கொள்ளப்படும்.

சுருக்க விளக்கம்:

அகம் - அகநானூறு, எழுத்து - எழுத்ததிகாரம், இளம் - இளம்பூரணம், கலி - கலித்தொகை, குறு - குறுந்தொகை, சொல் - சொல்லதிகாரம், சேனா - சேனாவரையம், தொல் - தொல்காப்பியம், நற் - நற்றிணை, பத்துப் - பத்துப்பாட்டு, பதி - பதிற்றுப்பத்து, பரி - பரிபாடல், புறம் - புறநானூறு, பேரா - பேராசிரியம், பொருள் - பொருளதிகாரம்.

"வேற்கரனைச் செந்தூர் விமலனையே வேண்டுகின்ற
பாற்கர சேது பதிவேந்தே - மேற்கொள்
விடைக் கொடியோற் கன்பன் மிருகண் டுபிறங்
கடைக்கிணையோ மற்றவர்தங் கால்"

சொல்லியல் கோட்பாடு

பேரா **செ.வை.சண்முகம்**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்
கைபேசி : 98651 96476

முன்னுரை

மதுரை காமராசர் பல்கலைக்கழகமும், மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து தொல்காப்பியப் பயிலரங்கம் நடத்துவது மகிழ்ச்சியைத் தருகிறது. ஏனெனில் மரபு வழியில் இடைச்சங்க காலத்திலே தோன்றியதாய்க் கருதப்படும் இலக்கண நூலான தொல்காப்பியம் தமிழரின் அறிவுச் சிந்தனையின் கொடுமுடி. தமிழ் வரலாற்றுப் பெட்டகம், தமிழின் முதல் அறிவியல் களஞ்சியம். அதற்கு உலகளாவிய நிலையிலும் ஒரு தனி இடம் உண்டு. ஆனால் நாம் அதைச் சரியாகப் புரிந்து உலகுக்கு எடுத்துச்சொல்லி உலகளாவிய நிலையில் இன்னும் இடம் பிடிக்கவில்லை. அதற்கு உரிய முயற்சி போன நூற்றாண்டிலிருந்து நடைபெற்று வருவது மகிழ்ச்சியே.

அந்த முயற்சியை இருபதாம் நூற்றாண்டு வளர்த்து எடுக்கப்பட்ட மொழியியலும் செய்து வருகிறது. அதனால் தொல்காப்பியப் பயிலரங்கில் எனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகளான சொல்லியல் கோட்பாடு, தொடரியல் கோட்பாடு என்பவை மொழியியல் சார் தலைப்புகள். அது என்ன உணர்த்துகிறது என்றால் மொழியியலின் வழியாகத் தொல்காப்பியத்தை விளக்கும்போது அந்த விளக்கம் உலகளாவிய விளக்கமாக அமைந்து தொல்காப்பியப் பெருமை எல்லோருக்கும் புலனாகும் என்பதுதான். மேலும் வரலாற்று வளர்ச்சியும் புலனாகும்.

நூலும் இலக்கணமும்

தொல்காப்பியத்தை நாம் இலக்கண நூல் என்று கருதுகிறோம். இலக்கணம் என்பது தொல்காப்பியத்தில் நூல் என்று குறிப்பிடப்பட்டு, இலக்கணம் என்பது பொதுப் பொருளில் கையாளப்பட்டுள்ளது அறியத்தகுந்தது.

'பாட்டு உரை நூலே... (செய் 78), 'நூலினான உரையினான' (செய்.163), 'நூல் எனப்படுவது நுவலுங்காலை/முதலும்' (செய் 164) என்பவை இன்றைய மொழியில் இலக்கண நூலைக் குறிப்பனவே.

'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்/ ஒன்றனைக்கூறும் பன்மைக் கிளவியும்/ வழக்கினாகிய உயர்சொல் கிளவி / இலக்கண மருங்கில் சொல்லாறல்ல' (கிளவி.26).

'அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின் / வெட்சி தானே குறிஞ்சியது புறனே / உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே' (புறத்.1)

'இழைபின் இலக்கணம் இயைந்தது ஆகும் (இழைபு வனப்பில் ஒரு வகை) (செய்.240.4)

'செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி / இழைத்த இலக்கணம் பிழைத்தன போல / வருவ உள எனினும்' (செய்.241)

என்ற வழக்குகள் இலக்கணம் என்பது வரையறை, பயன்பாட்டு விதி என்ற பொருளில் அமைந்துள்ளன. பொதுவாக இலக்கணம் என்பது மொழி அமைப்பை விளக்கும் (description) நூல் எனக் கருதப்படுவது பிற்காலப் பொருள். ஆனால் அதன் அடிப்படை பொருள் நோக்கில் இலக்கணம் மொழியின் அமைப்பை வரையறுத்து சட்டம் இயற்றுதல் (prescription) என்ற பொருள் உடையது என்று பரவலாகக் கருதப்படுகிறது.

'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' (கிளவியாக்கம் 14) என்ற சில சூத்திரங்கள் அமைந்திருந்தாலும் (கிளவி.19, 20, 23, 35 விளக்க நிலையிலேயே பல சூத்திரங்கள் அமைந்துள்ளன.

உறழ்ச்சியை 'ஒக்கும்' (வினைநிலை ஒக்கும் (வேற்றுமை மயங்கியல், 2. 'உரிமையும் உடைத்தே', 'நோக்கோர் அனைய என்மனார் புலவர்' 9 முதலியன) என்று தொல்காப்பியம் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது. அதில் வேடிக்கை என்னவென்றால் 'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' (கிளவி.13) என்பதன் அடுத்த சூத்திரமே 'வினாவும் செப்பே வினா எதிர் வரினே' என்று உலக வழக்குகளில் மாறுபட்ட அமைப்பு அமைந்துள்ளதைக் குறிப்பிடுவதை அது ஏற்றுக் கொள்கிறது என்று பொருள்.

உறழ்ச்சிகளை விளக்கியுள்ளதன் வரலாற்று வழக்குகள், திசைச் சொற்களில் புலப்படுத்தப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தில் செய்யுள் என்பது இலக்கியம் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. செய்யுளியலில் பாடுபொருள் ('திணை, கைக்கோள், கூற்று, வனப்பு, அம்மை, அழகு முதலியன) யாப்பும் ஆகியவை செய்யுள் கூறுகளாகக் கூறியுள்ளதால் (செய்.1) செய்யுளை இலக்கியம் என்று கொள்ளலாம்.

சொல்லதிகாரத்திலும் 'செய்யுளாறு / வழக்காறு' (கிளவி.18) 'செய்யுள் மருங்கு / வழக்கியல் மருங்கு' (எச்சம்.67) என்று வேறுபடுத்துவதும் செய்யுள் வழக்கு / பேச்சு வழக்கு என்று வேறுபடுத்துவதும் அதை உறுதி செய்கிறது. இலக்கிய மொழி பற்றிய கருத்துகள் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் அமைந்துள்ளன (முழு விவரம் சண்முகம், 2014; 40-52).

தொல்காப்பியம் எழுத்து, சொல் அதிகாரங்களில் தமிழ் மொழி அமைப்பை விளக்கும் முறையில் சொல்லியல், தொடரியல் பற்றிய கருத்துகள் அமைந்துள்ளன. உண்மையில் எழுத்ததிகாரம் என்பதில் மொழியியல் நோக்கில் எழுத்தியல், பிறப்பியல் புணரியல் என்ற மூன்று கருத்துகள் அடங்கியுள்ளன. புணரியலில், சொல்லியலின் ஒரு பகுதியான கருத்து அடங்கியுள்ளது. அதனால்தான் நன்னூலார் எழுத்ததிகாரத்தை எழுத்தியல், பதவியல், புணரியல் என்று மூன்று பெரும் பிரிவாகப் பகுத்து விளக்கியுள்ளதில் பதவியல் என்பதில் சொல்லியலின் கோட்பாட்டையே விளக்கியுள்ளார்.

பதம் வடமொழி என்பதால் முத்துவீரியம் (19ஆம் நூற்றாண்டு) பதவியலை மொழியியல் என்று குறிப்பிட்டுள்ளது. அது சொல்லை மொழி என்றே (116, 117, 118 முதலியன) குறிப்பிட்டுள்ளது. அது பழைய மரபே. தொல்காப்பியமும் சொல்லை மொழி என்றே பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது அறியத் தகுந்தது. இன்று நாம் மொழி என்பது பாஷை (Language) என்று வழங்குவதால் மொழியியல் ஆங்கிலத்தில் லிங்குஸ்டிக்ஸ் (Linguistics) என்று குறிப்பிடப்படுகிறது.

இலக்கணமும் மொழியியலும்

பொதுவாக இலக்கணம் தனி மொழியின் அமைப்பை விளக்குவது. அந்த முறையில் உலகளாவிய நிலையில் இலக்கணம் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்னரே அதாவது முன்பொது ஆண்டு 1600 (BCE 1600) பாபிலோனியாவில் தொடங்கிவிட்டது. தொல்காப்பியத்தின் காலம் கருத்து மாறுபாட்டுக்கு உரியதாயினும் குறைந்தது 2000 ஆண்டு பழமை உடையது என்பதும் தமிழில் கிடைக்கும் முதல் இலக்கணம் என்பதிலும் கருத்து மாறுபாடு இல்லை.

மாறாக மொழியியல் என்பது மொழி அறிவியல் என்ற முறையில் எல்லா மொழிகள் பற்றிய கோட்பாட்டு விளக்கம் என்பதால் எல்லா மொழிக்கும் பொதுவானவை. மொழியியல் முதலில் வரலாற்று மொழியியலாக 19ஆம் நூற்றாண்டில் தொடங்கி ஒரு கால மொழியின்

அமைப்பை ஆராயும் விளக்கமுறை என்ற துறை 20ஆம் நூற்றாண்டில் தோன்றியது. மொழி கட்டமைப்பு (Structure) உடையது. பல மாறுபாடுகள் இருந்தாலும் ஒழுங்கமைவு (pattern) உடையது. அதனால் மொழி அமைப்பைக் கண்டறிய முடிகிறது. அதே சமயத்தில் மொழி அமைப்பில் சில ஒழுங்குமீறல்களும் உறழ்ச்சியும் அமைந்துள்ளன.

பழங்குடி மக்கள் மொழியைக் கள ஆய்வு செய்த 19ஆம் நூற்றாண்டில் பழைய இலக்கணங்களை ஓரளவு உள்வாங்கத் தொடங்கியது விளக்கமுறை மொழியியல் (descriptive linguistics) என்ற ஆய்வு முறை. அது இன்று உலகளாவிய நிலையில் ஒரு ஆய்வுத் துறையாக மலர்ந்து, விளக்க முறை இலக்கணத்தில் அமைப்பு மொழியியல் (Structural linguistics), மாற்றிலக்கண மொழியியல் (Transformational linguistics) என்று இரண்டு முறை வளர்ந்துள்ளன. பயனாக்க மொழியியல் (Applied linguistics) என்ற நிலையில் சமூக மொழியியல், கிளை மொழியியல் முதலிய மரபு வழி துறைகளோடு கணினி மொழியியல், மொழியியல் இலக்கியத்திறனாய்வு என்று பல உள்துறைகளைப் பெற்று வளர்ந்து வருகிறது. இருபத்தோராம் நூற்றாண்டில் மொழியியல் இலக்கியத் திறனாய்வு தமிழில் இலக்கிய மொழியியல் என்று குறிப்பிடப்பட்டு ஆய்வு நடைபெற்று வருகிறது.

இலக்கணம் செய்யுள் மொழியின் கூறுகளையும் ஆங்காங்கே குறிப்பிடும். மொழியியல் செய்யுள் மொழி தனி ஆராய்ச்சி உரிய துறையாகக் கருதும்.

இன்னொரு நிலையில் இலக்கணம் முடிந்த நிலை தயாரிப்பு (product), மொழியியல் நிகழ்வு நிலை (Process) என்று கொள்ளலாம். இலக்கண ஆசிரியர் உள்ளுணர்வால் எழுதிய இலக்கணத்தை மொழியியல் நோக்கு அந்த இலக்கணம் உருவான முறையை அறிய உதவுகிறது. ஆகவே மொழியியல் மூலம் இலக்கணத்தை ஆராய்வது. அது கூறும் மொழி அமைப்பை மொழியியல் அடிப்படையில் அறிவதோடு அதன் மொழியியல் கோட்பாடுகளையும் புரிந்து கொள்ள உதவுகிறது. அதில் சில குறைகள் புலப்பட்டாலும் அது பல நூற்றாண்டு முற்பட்ட அறிவு முறை என்ற பரிவுணர்வு உடையது.

மொழியியல் ஒலியனியல் (Phonology) சொல்லியல் (Morphology) தொடரியல் (Syntax) என்று பகுத்து மொழி அமைப்பை ஆராயும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

சங்கச் செய்திகள்

07.02.2019 அன்று சாலைப் பாதுகாப்பு விதிகள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி, செந்தமிழ்க் கல்லூரி முதல் பேச்சியம்மன் படித்துறை வரை நடைபெற்றது. இப்பேரணியை மதுரை திலகர்திடல் காவல்துறை ஆய்வாளர் திரு.பி.பி.மோகன் அவர்கள் தொடங்கி வைத்து, சாலைப் பாதுகாப்பில் நாம் அனைவரும் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியினை செந்தமிழ்க் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

12.02.2019 அன்று விருதுநகர் வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரியில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளில் கலந்து கொண்டு பேச்சுப்போட்டியில் செந்தமிழ்க் கல்லூரி இளங்கலை முதலாமாண்டு மாணவன் பெ.தெய்வம் இரண்டாம் பரிசும் கவிதைப் போட்டியில் முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா மூன்றாம் பரிசும் பெற்றனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலமும் நான்காம் தமிழ்ச் சங்கம் - செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து நடத்திய தேசிய அளவிலான தொல்காப்பியப் பயிலரங்கம் 14.02.2019, 15.02.2019 மற்றும் 16.02.2019 ஆகிய மூன்று நாட்கள் செந்தமிழ்க் கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. 14.02.2019 முற்பகல் பயிலரங்கத் தொடக்க விழாவில் மதுரை காமராசர் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் மு.கிருஷ்ணன் அவர்கள் பயிலரங்கினைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் “ஒருவர் பெற்ற கல்விச் செல்வமானது சமூகத்திற்குப் பயன்படும் வகையில் இருக்க வேண்டும்; வாழ்வியல் அறங்கள், ஒழுக்கலாறுகள், பண்பாடுகள் ஆகியவை நிறைந்த பொக்கிஷமாகத் திகழும் தமிழ் இலக்கியங்களை அனைவரும் கற்றுத் தெளிய வேண்டும்; நமது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைக் காக்க வேண்டும். பழங்காலச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய கூட்டமைப்பு முனையம் ஏற்படுத்தப்பட உள்ளது” என்று குறிப்பிட்டார். பல்கலைக்கழகத்தில் வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்கள் பெயரில் இருக்கை ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை

முன்வைக்கப்பட்டது. இவ்விழாவிற்கு செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழியற்புலத் தலைவர் முனைவர் வை.இராமராஜபாண்டியன் அவர்கள் அறிமுகவுரையாற்றினார். கல்லூரி முதல்வர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரை நல்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளரும் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்துறைத் தலைவருமான முனைவர் உ.கருப்பத்தேவன் நன்றி கூறினார். துணைமுதல்வர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்தார். இப்பயிலரங்கில் பேராசிரியர்கள் சு.அழகேசன், மு.இளமுருகன், தமிழழகன், கு.வெ.பாலசுப்பிரமணியம், செ.வை.சண்முகம், பெ.மாதையன், ப.மருதநாயகம், தூ.சேதுபாண்டியன், இ.பேச்சிமுத்து ஆகியோர் கருத்துரை வழங்கினர். 26 கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 202 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிலரங்க நிறைவு விழா 16.02.2019 மாலை நடைபெற்றது. முதுமுனைவர் இரா.இளங்குமரனார் இவ்விழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். பயிலரங்கில் கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் சான்றிதழுடன் நான்காம் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட தொல்காப்பியத் தெளிவுரை நூல்கள் ஐந்தும் வழங்கப்பட்டன. இப்பயிலரங்கினை மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்துறைத் தலைவர் முனைவர் உ.கருப்பத்தேவன், செந்தமிழ்க் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் ஜெ.கோகிலா மற்றும் மா.செல்வத்தரசி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

19.02.2019 அன்று ஜி.நாகராஜன் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை இரண்டாமாண்டு மாணவி ச.சரண்யா தமது உரையில், “பல எழுத்தாளர்கள் எழுத்திலும் கூடத் தொடத் தயங்கிய பாத்திரங்களை வெகு எதார்த்தத்துடன் படைத்தளித்தவர் நாகராஜன். திருடர்கள், விலைமாது என அவருடைய படைப்புலகம் உலக வாழ்வின் இருண்ட முகங்களை அவைகளின் அறங்களுடன் காட்சிப்படுத்தியவர். விளிம்புகளை வரைத்த ஓவியர். ‘குறத்தி முடுக்கு’, ‘நாளை மற்றுமொரு நாளே’ ஆகிய குறுநாவல்களும், 17 சிறுகதைகளும், ஆங்கிலத்தில் கட்டுரைகளும், ஒரு புத்தகமும் எழுதியவர். மதுரைக் கல்லூரியில் படித்து முதல் மாணவராக வெற்றி பெற்று அறிவியல் மேதை சர்.சி.வி.ராமனிடமிருந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றவர்” என்று குறிப்பிட்டார். முன்னதாக புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த இராணுவ

வீரர்களுக்கு அஞ்சலியும் ஜி.நாகராஜன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதையும் செலுத்தப்பட்டது.

21.02.2019 அன்று 'உலகத் தாய்மொழி தினம்' சங்க வளாகத்தில் கொண்டாடப்பட்டது. உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் மு.அப்துல்சமது அவர்கள் "தமிழுக்கு அமுதென்று பேர்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

23.02.2019 அன்று மங்கையர்க்கரசி கல்லூரியில் "நட்சத்திரா 2019" என்ற தலைப்பில் அனைத்து கல்லூரி மாணவிகளுக்கிடையேயான போட்டிகள் நடைபெற்றன. இதில் செந்தமிழ்க் கல்லூரி முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா கவிதைப் போட்டியில் முதலிடமும் பேச்சுப் போட்டியில் மூன்றாமிடமும் பெற்றார். நெருப்பில்லா சமையல் போட்டியில் செந்தமிழ்க் கல்லூரி முதுகலை இரண்டாமாண்டு மாணவி தி.செண்பக கனிமொழி முதலிடம் பெற்றார்.

"பூமேவு செந்தமிழைப் புரத்தலினாற் சிவபத்திப்
பொலிவால் என்றும்
தாமேவு பரிசிலர்கள் கழறியதை அறிதலினால்
தமிழ்வல் லோர்கள்
தேமேவும் உக்கிரபாண் டியனென்னச் சிவபாத
சேகரப்பேர்த்
தூமேவு வளவனென சேரனென மிஷீர்
பாண்டித்துரைசீர் வாழ்க"

உ.வே.சாமிநாதையர்

ஏப்ரல் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

ஔவை.துரைசாமிப்பிள்ளை
(ஏப்ரல்.3)

பாரதிதாசன்
(ஏப்ரல்.21)

கந்தர்வன்
(ஏப்ரல்.22)

வ.சுப.மாணிக்கம்
(ஏப்ரல்.23)

ரா.பி.சேதுப்பிள்ளை
(ஏப்ரல்.24)

ச.தண்டபாணி தேசிகர்
(ஏப்ரல்.25)

சாலினி இளந்திரையன்
(ஏப்ரல்.28)

உ.வே.சா
(ஏப்ரல்.28)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்னம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1